2-9
அக்டோபர் 2025
வியாழக்கிழமை
கோயம்புத்தூர்

# தின இதிகை

DINA IDHIGAI
TAMIL WEEKLY
NEWSPAPER

வார இதழ்
விலை ரூ.5
8 பக்கங்கள்

Vol. No.1 - Issue No. 3 | RNI : TNTAM/25/A1547 | www.dinaidhigai.com | Price Rs.5/-




# நான்கு முனை போட்டியாக மாறுகிறதா 2026 தேர்தல்?

## பிரியும் ஓட்டுக்களால் யாருக்கு லாபம்

● கோவை

வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, நாதக, தவெக என கிட்டத்தட்ட நான்குமுனைப் போட்டி உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் தேர்தலுக்கு இன்னும் சுமார் 8 மாதங்கள் இருப்பதால் , மூன்று முனைப் போட்டியா? நான்கு முனைப் போட்டியா அல்லது ஐந்து முனைப் போட்டியாக கூட மாறலாம் என்கின்றனர் அரசியல் விமர்சர்கள். இதில் நாதக–வும் தவெக–வும் பிரிக்கும் வாக்குகள் யாருக்குச் சாதகமாகும் என்பதே இப்போதைய முக்கிய கேள்வி.



தமிழகத்தில் ஒவ்வொரு தேர்தலுக்கும் கூட்டணி கணக்குகள் மாறினாலும், மூன்றாவது அல்லது நான்காவது அணிகள் எப்போதும், பிரதானமான திமுக, அதிமுக கட்சிகளின் கூட்டணியின் வெற்றி, தோல்விகளுக்கு காரணமாக இருக்கின்றன.

தமிழ்நாடு 2026 சட்டமன்றத் தேர்தல் களத்தில் திமுக கூட்டணியில் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள், மநீம, மதிமுக, போன்ற பல கட்சிகளோடு, ஆளும் திமுக பலத்தோடு களத்தில் உள்ளது.

இதே போல் தேசிய ஜனநாயக கூட்டணியான அதிமுக தற்போது அதிகாரப்பூர்வமாக பாஜக கூட்டணி அமைத்துள்ளது. ஏற்கனவே அதிமுக கூட்டணியில் இருந்த தேமுதிக இன்னும் எந்தக் கட்சியுடன் கூட்டணி என்பதை முடிவு செய்யவில்லை எனத் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் நடக்கும் தேமுதிக மாநாட்டில் கூட்டணியைப் பற்றி அறிவிப்போம் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இதேபோல 2024ல் நடந்த பாராளுமன்ற தேர்தலில் பாரதிய ஜனதாவுடன், பாட்டாளி மக்கள் கட்சி, அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், இந்திய ஜனநாயகக் கட்சி, புதிய நீதிக் கட்சி, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், தமிழ் மாநில காங்கிரஸ், ஓ.பன்னீர் செல்வம் அணி ஆகியோர் கூட்டணியில் அங்கம் வகித்தனர்.

தற்போது அதிமுகவுடன் பாரதிய ஜனதா கூட்டணி அமைத்துள்ளதால் 2024 பாரதிய ஜனதாவுடன் கூட்டணி வைத்த கட்சிகள் தொடர்கிறதா? என்ற கேள்வி நிலவி வந்த நிலையில் ஓ.பன்னீர்செல்வம் கூட்டணியில் இருந்து வெளியேறினார், அவரைத் தொடர்ந்து டிடிவி தினகரன் கட்சியான அம்மா மக்கள் முன்னேற்றக் கழகமும் வெளியேறியது.

தற்போது தந்தை மகன் பிரச்சனை நிலவி வரும் சூழலில் பாமக முடிவு அறிய முடியாதவையாக இருக்கிறது. இதனால் இன்னும் தேசிய ஜனநாயகக் கூட்டணி முடிவாகாமல் இருக்கிறது. அனைவரையும் இணைத்து மெகா கூட்டணி அமைக்கும் முயற்சியில் தலைவர்கள் மும்முரமாக இருக்கின்றனர்.

நாம் தமிழர் கட்சி, உருவான காலத்தில் இருந்தே தனித்துப் போட்டி போட்டு வந்துள்ள நிலையில் இந்த முறையும் தனித்தே களம் காண்கிறது.

2016–ம் ஆண்டு முதல்முறையாக தனித்துப்போட்டியிட்டு, 4,58,104 வாக்குகள் பெற்றது. இதனையடுத்து இராதாகிருஷ்ணன் நகர் இடைத் தேர்தலில் 2.15% வாக்குகள், நாடாளுமன்றத் தேர்தலில் 3.15% வாக்குகள், 2021 சட்டமன்ற தேர்தலில் 6.72% வாக்குகள் , சமீபத்தில் நடத்த ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் 6.35% வாக்குகள் என தனியாக வாக்குகளை சேகரித்துள்ளது. இந்த முறையும் பல சதவீத வாக்குகளை பிரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதியதாகக் கட்சி துவங்கியுள்ள நடிகர் விஜயின் தவெக கட்சி எந்த மாதிரியான தாக்கத்தைத் தரப் போகிறது என்பது அனைவரின் எதிர் பார்ப்பாக உள்ளது. திமுகவுக்கு எதிராக ஒரு அணியில் திரள வேண்டும் என்ற கருத்தில் விஜய் இருப்பார் என சொல்லப்பட்டது, ஆனால் அவரது பிரச்சாரத்தில் திமுகவை எதிர்த்த கையோடு பாஜகவையும் எதிர்த்துள்ளார்.

சமீபத்தில் நாமக்கல்லில் பேசிய தவெக தலைவர் விஜய் அதிமுகவையும் தாக்கிப்பேசியுள்ளார். இதனால் அவரது திட்டம் என்ன என்பது இன்னும் முழுமையாகாமல் இருக்கிறது. இருப்பினும் 2019 பாராளுமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்த அம்மா மக்கள் முன்னேற்றக்கழகம், மற்றும் ஓ.பன்னீர்செல்வம் வெளியேறியதால் , விஜயுடன் இணைவார்கள் என யூகிக்கப்படுகிறது. இவர்களுடன் இன்னும் சிலர் இணைவார்களா? அல்லது தேசிய ஜனநாயக கூட்டணியை வலுப்படுத்துவார்களா? என்பது தெரிய சில மாதங்களாகும். திமுகவைப் பொறுத்தவரை அதே பலம் வாய்ந்த கூட்டணியாக தொடர்கிறது. ஆளும் கட்சி என்பதால் மக்களுக்கு செய்த நலத்திட்டங்களை எடுத்துரைத்து மீண்டும் ஆட்சியை பிடிக்க முனைப்புக் காட்டி வருகிறது.

தவெக மற்றும் நாம் தமிழர் பிரிக்கும் வாக்குகள் யாருக்கு சாதகமாக அமையப்போகிறது என்ற கேள்வி அரசியல் களத்தில் ஆழமான கேள்வியாக வலம் வருகிறது.

# நமது ஒரே எதிரி, மற்ற நாடுகளை சார்ந்திருப்பது தான்!

## பிரதமர் நரேந்திர மோடி பேச்சு!

● குஜராத்

உலகில் நமக்கு எந்த பெரிய எதிரியும் இல்லை.நமதுஒரேஉண்மையானஎதிரி, மற்ற நாடுகளைச் சார்ந்திருப்பது தான் என்று குஜராத்தில் சமீபத்தில் நடந்த நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குஜராத்தின் பவநகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பாரதப் பிரதமர் நரேந்திர மோடி, "இந்தியா தற்சார்பு அடைய வேண்டும், அதற்கான தன்னம்பிக்கையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். உலகில் நமக்கு எந்த பெரிய எதிரியும் இல்லை நமது ஒரே உண்மையான எதிரி என்பது மற்ற நாடுகளைச் சார்ந்திருப்பதுதான். இதுவே நமது மிகப் பெரிய எதிரி. நாம் ஒன்றாக இந்த எதிரியை தோற்கடிக்க வேண்டும். வெளிநாடுகளைச் சார்ந்து இருப்பது அதிகமாக இருந்தால், நாட்டின் தோல்வி அதிகமாகும். உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நமது நாட்டில் அமைதி, ஸ்திரத்தன்மை, செழிப்பை பேணுவதற்கு தற்சார்பு அவசியம். சிப்கள் முதல் கப்பல்கள் வரை அனைத்தையும் நாம் தயாரிக்க வேண்டும். இந்தியாவின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக ஒரே ஒரு மருந்து மட்டுமே உள்ளது. தன்னம்பிக்கையே அந்த மருந்து. நம் ஆயுதங்களுக்கு வெளிநாடுகளில் மவுசு நிலவுகிறது.தேசத்தின் முதுகெலும்பாக செயல்படுபவை நமது துறைமுகங்கள். இந்திய துறைமுகங்களுக்கு புதிய சீர்திருத்தங்களை நாங்கள் கொண்டு வர உள்ளோம். 'ஒரு தேசம், ஒரு ஆவணம்' மற்றும் 'ஒரு தேசம், ஒரு துறைமுக செயல்பாடு' ஆகியவை வர்த்தகத்தை எளிதாக்கும். பெரிய கப்பல்களை உருவாக்குவதன் மூலம் கடல்சார் துறையை வலுப்படுத்த வரலாற்று சிறப்பு மிக்க முடிவை எடுத்துள்ளோம். உலகளாவிய கடல்சார் சக்தியாக நாட்டின் துறைமுகங்கள் முதுகெலும்பாக உள்ளன. என தெரிவித்தார்.



# கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் பில்லூர் அணையில் ஆய்வு

● கோவை

கோவை மாநகராட்சிக் குட்பட்ட பொதுமக்களுக்கு சிறுவாணி, பில்லூர் I, பில்லூர் II, பில்லூர் III, ஆழியார் மற்றும் பவானி (கவுண்டம்பாளையம், வடவள்ளி) குடிநீர் திட்டங்களின் மூலமாக தங்கு தடையின்றி சீரான இடைவெளியில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இன்று கோவை மாவட்டத்தில் உள்ள பில்லூர் அணையினை கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். மேலும் அவர் அணையின் நீர்மட்டம், நீர் இருப்பு, நீர் வெளியேற்றம் குறித்தும் சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் சிவகுருபிரபாகரன் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர் உடன் சென்றனர்.

இதன்பின்னர்,பில்லூர் அணையின் அருகில் அமைந்துள்ள குந்தா நீர் மின்நிலையத்தினையும் அவர் நேரில் ஆய்வு மேற்கொண்டு, நீர் மின் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வுகளின் போது, யங் இந்தியன்ஸ் எனும் இளைஞர் அமைப்பின் சார்பில் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் மூலம் தேர்வு செய்யப்பட்ட 11 மாணவ, மாணவியர்களுக்கு குடிநீர் திட்டம் தொடர்பாக விளக்கம் அளிக்கப் பட்டது.





# தொடர்ந்து அதிகரிக்கும் தங்கத்தின் விலை

● சென்னை

சென்னையில் தற்போது 22 காரட் ஆபரணத்தங்கம் சவரனுக்கு ரூ.480 ஆக உயர்ந்துள்ளது ஒரு கிராம் ரூ.10,770 ஆகவும், ஒரு சவரன் ரூ.86,160 ஆகவும் விற்பனை ஆகிறது.

சர்வதேச முதலீட்டாளர்கள், தங்கத்தில் அதிக முதலீடு செய்வது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதாக கூறப்படுகிறது. செப்டம்பர் 27–ம் தேதி தங்கம் விலை கிராமுக்கு, 90 ரூபாய் உயர்ந்து, 85,120 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.


ஜனவரியில் தங்கம் விலை – 57,200 ரூபாயாக இருந்தது, பிப்ரவரியில் – 60,200 ஆகவும், ஏப்ரலில்– 72,120 ரூபாயாகவும், ஆகஸ்ட் மாதத்தில் – 76,960 ஆகவும் தற்போது 86,160 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. குறிப்பாக, மேற்கண்ட விலைகள் ஜி.எஸ்.டி. உள்ளிட்ட வரிகள் மற்றும் கூடுதல் கட்டணங்கள் சேர்க்கப்படாத அடிப்படை விலைகள் என்பதை நினைவில் கொள்ளவும்.



தின இதிகை
வாரம் ஒரு வாசிப்பு!
செய்திகளுடன் சேர்ந்து உங்கள் விளம்பரமும் பேசட்டும்
தின இதிகையில்..
விளம்பர கட்டணம் ரூ.325/- முதல்...
உடனே பதிவு செய்யுங்கள்!
77080 700 53
9345 97 57 47
7418 57 57 47

# இந்தியாவில் செமிகண்டக்டர் துறையின் வளர்ச்சி

இந்தியா உலகளவில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்திலும், மென்பொருள் துறையிலும் முன்னணியில் உள்ளது. இப்போது அதே வேகத்தில் செமி கண்டக்டர் உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி துறையிலும் முக்கியமான முன்னேற்றங்களை எட்டிக் கொண்டிருக்கிறது. செமிகண்டக்டர் என்பது நவீன தொழில்நுட்பத்தின் இதயம் என்று சொல்லலாம். கைப்பேசிகள், கணினிகள், வாகனங்கள், மருத்துவ உபகரணங்கள், செயற்கை நுண்ணறிவு, 5G தொடர்பு, பாதுகாப்பு துறை போன்ற அனைத்திலும் அரையொட்டக சிப் அவசியமாக பயன்படுகின்றன.



### அரசின் முயற்சிகள்

இந்திய அரசு "Semicon India Program" மூலம் பில்லியன் டாலர் முதலீடுகளை ஈர்த்து, உலகின் முன்னணி நிறுவனங்களை இந்தியாவுக்கு வரவழைக்க முயற்சி செய்து வருகிறது. இதன் மூலம் அரையொட்டக உற்பத்தி, வடிவமைப்பு (design), ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகிய துறைகளில் புதிய வாய்ப்புகள் உருவாகின்றன.

மேலும், உத்தரப் பிரதேசம், குஜராத், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் அரையொட்டக உற்பத்தி பூங்காக்கள் (manufacturing hubs) அமைக்கப் படுகின்றன. குறிப்பாக குஜராத்தில் அறிவிக்கப்பட்டுள்ள பெரிய அளவிலான semiconductor fabrication (fab) திட்டம் இந்தியாவுக்கு உலக அளவில் போட்டியிடும் வலிமையைக் கொடுக்கும்.

### வேலை வாய்ப்புகள், கல்வி

இந்தத் துறையின் வளர்ச்சி மூலம் ஆயிரக்கணக்கான புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும். பொறியியல், மின்னணு, தொடர்பியல், பொருள் அறிவியல் போன்ற துறைகளில் படிக்கும் மாணவர்களுக்கு உலக தரமான வாய்ப்புகள் கிடைக்கும். மேலும், இந்தியாவின் ஆராய்ச்சி நிறுவனங்களும், தொழில்நுட்ப நிறுவனங்களும் இணைந்து புது தலைமுறை சிப்புகளை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றன.

### எதிர்கால பாதை

இந்தியா தற்போது உலகின் மிகப்பெரிய சிப் நுகர்வோர் நாடுகளில் ஒன்றாக உள்ளது. அதேசமயம் உற்பத்தி திறனை மேம்படுத்திக் கொண்டால், "Design in India, Make in India, and Innovate in India" என்ற குறிக்கோள் விரைவில் நிஜமாகும். செமி கண்டக்டர் உற்பத்தியில் தன்னிறைவு பெற்றால், இந்தியா தனது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதோடு, உலகின் முன்னணி தொழில்நுட்ப மையமாக உயர வாய்ப்பு உள்ளது.

✍ ப.முத்து சுப்பிரமணியன்
இணை பேராசிரியர்
மின்னணு , தொடர்பியல்
பொறியியல் துறை
கோயம்புத்தூர் தொழில்நுட்பக்
கல்லூரி, கோயம்புத்தூர்

# மெல்ல முன்னோக்கி நகர்கிறது கோவையின் செமி கண்டக்டர் துறை

● கோவை

'செமி–கண்டக்டர்கள்' வடிவமைப்பு, தயாரிப்பு மீது தமிழக அரசு தனி கவனம்செலுத்திவருகிறது. 'தமிழ்நாடு செமி–கண்டக்டர் இயக்கம் 2030' எனும் பெரும் திட்டத்தை இந்த ஆண்டு பட்ஜெட் அறிவிப்புகளில் அரசு அறிவித்தது. இதை 5 ஆண்டு திட்டமாக முன்னெடுக்க அரசு முடிவு செய்துள்ளது.

இதில் செமி–கண்டக்டர் வடிவமைப்பு மற்றும் சோதனை செய்யும் நிறுவனங்களைத் தமிழகத்தில் ஊக்குவிப்பது, செமி கண்டக்டர் உற்பத்திக்குத் தேவையான உபகரணங்களை தயாரிக்கும்நிறுவனங்களை ஊக்குவிப்பது, இதில் ஆராய்ச்சி மற்றும் புதுமைகளை ஊக்குவிப்பது ஆகிய பணிகள் நடைபெறும். மேலும் செமி– கண்டக்டர் துறைக்கான திறமை மிக்க பணியாளர்களை உருவாக்கி, தமிழகத்திற்கும், தேசிய அளவிலான அளவில் செயல்பட வைக்கவும் திட்டமிடபட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக கோவை சூலூர் பகுதியில் 100 ஏக்கர் பரப்பில் செமி–கண்டக்டர் உற்பத்திக்கான இயந்திரத்தொழில் பூங்கா ஒன்றை உருவாக்க அரசு முடிவெடுத்துள்ளது.

செமி–கண்டக்டர் துறையில் சிறந்து விளங்கும் அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, தைவான் நிறுவனங்கள் உடன் இணைந்து இந்த பூங்காவை உருவாக்க அரசு திட்ட மிட்டுள்ளதாக தகவல் வெளிவந்தது. இந்த நிலையில், சூலூரில் 100 ஏக்கரில் அமைகிற பூங்கா பகுதியில் அதிநவீன செமி–கண்டக்டர் துறைக்கான 'பொது வசதி வளாகம்' ஒன்றை உருவாக்க அதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்க ஆலோசனை நிறுவனத்தை நியமனம் செய்ய தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் முடிவு செய்துள்ளது. விருப்பமுள்ள நிறுவனங்கள் www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் 27.10.25 மதியம் 3 மணிக்குள் தங்களின் முன்மொழிவுகளை சமர்ப்பிக்கலாம் என அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

# ஜெம் கேன்சர் சென்டரில் ரோஸ் டே கொண்டாட்டம்!




● கோவை

ஜெம் ஹாஸ்பிடல்ஸ் நிர்வகிக்கும் ஜெம் கேன்சர் சென்டர் தனது முதல் ரோஸ் டே நிகழ்ச்சியை சனிக்கிழமை கொண்டாடியது. "வல்லமை தாராயோ" என்ற மகாகவி பாரதியார் வரிகளைத் தீமாகக் கொண்டு, புற்றுநோயாளிகளை ஊக்குவிப்பதும், புற்றுநோய் ஒரு ஆபத்தான நோயல்ல என்பதை சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இந்த நிகழ்ச்சியின் நோக்கமாக இருந்தது.



100–க்கும் மேற்பட்ட புற்றுநோய் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளும், சிகிச்சையை முடித்த நோயாளிகளும் கலந்து கொண்டு, தன்னம்பிக்கையுடன் சிகிச்சை பெற்று, இந்த நோயை வெல்ல முடியும் என்ற உறுதியை மற்ற நோயாளிகளுக்குப் பகிர்ந்தனர்.

ஜெம் ஹாஸ்பிட்டல்ஸ் தலைவர் டாக்டர் சி. பழனிவேல் தலைமை தாங்கினார். ஜெம் ஹாஸ்பிட்டல்ஸ் தலைமை செயல் அதிகாரி டாக்டர் பிரவீன் ராஜ், திருமதி ஜெயா பழனிவேல், திருமதி பிரபா பிரவீன் ராஜ் ஆகியோரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியைத் தொடங்கினர்.

இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகக் காவல் துறை மேற்பார்வையாளர் (Coimbatore Superintendent of Police) கார்த்திகேயன் IPS கலந்து கொண்டு, 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு இலவசமாக மாமோகிராம் சோதனை முகாம் மற்றும் புற்றுநோயாளிகளுக்கான ஜெம் ஹாஸ்பிடல்ஸ் ஆன்கோ–சப்போர்ட் குழுவைத் தொடங்கி வைத்தார்.

ஜெம் ஹாஸ்பிடல்ஸ் தலைவர் டாக்டர் சி. பழனிவேல், தனது 50 ஆண்டுகாலப் புற்றுநோய் சிகிச்சை அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். புற்றுநோய் நோயாளிகளின் சிரமங்களே தன்னை லேபரோஸ்கோபிக் சிகிச்சையை கற்றுக்கொள்வதற்கும், அதில் சிறப்பிக்கவும் ஊக்குவித்தன என்றார். புற்றுநோய் என்பது ஆபத்தானநோயல்ல, சிகிச்சை பெறக்கூடியநோய் என்பதில் அனைவரும் நம்பிக்கை கொள்ள வேண்டும் எனவும், புற்றுநோய் பரிசோதனைகள் செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

ஜெம் ஹாஸ்பிட்டல்ஸ் தலைமை செயல் அதிகாரி டாக்டர் பிரவீன் ராஜ், "இன்றைய நிலையில் புற்றுநோய் மற்ற எந்த நோயைப் போலவே தான். எந்த நோயையும் சிகிச்சையின்றி நீண்ட காலம் விட்டுவிட்டால் அதுவே உயிருக்கு ஆபத்து தரும். ஆகவே உடல்நலத்தைப் பற்றி விழிப்புணர்வு கொண்டு, தற்காலிக பரிசோதனைகள் செய்து, தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் சிகிச்சைப் பெற வேண்டும்," என்றார். மேலும், இன்றைய மருத்துவ முன்னேற்றங்கள் புற்றுநோயை வெல்லும் வகையில் மிகச் சிறப்பாக உள்ளன என்றும் குறிப்பிட்டார்.

மேலும் அவர், ஜெம் ஹாஸ்பிட்டல் புற்றுநோய் தடுப்பு சோதனை திட்டங்கள் WHO முறைப்படி வடிவமைக்கப்பட்டுள்ளன என்றார். சாதாரண சோதனைகளில் புற்றுநோய் அபாயங்களை முன்கூட்டியே கண்டறிய முடியும். பெரியவர்கள் மாஸ்டர் ஹெல்த் சேக்–அப் செய்வது போலவே இந்த பரிசோதனையையும் செய்து அபாயத்தைத் தவிர்க்கலாம் எனவும் கூறினார். 'Prevention is better than cure' என்ற செய்தியை அனைவரும் பரப்ப வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தன் உரையில் கார்த்திகேயன் IPS, "மருந்துகள் மட்டும் புற்றுநோயை வெல்ல உதவாது. தைரியம், நம்பிக்கை மிகவும் அவசியம். இன்று கலந்து கொண்டுள்ள நோயாளிகள் தைரியமாக சிகிச்சை பெற்று முன்னுதாரணமாக இருக்கிறார்கள்," என்று பாராட்டினார்.

முன்னதாக ஜெம் கேன்சர் சென்டர் இயக்குநர் டாக்டர் பாரத் ரங்கராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார். சிந்தனை ஊக்குவிக்கும் உரையாற்றினார் ரோட்டேரியன் மதனகோபால். நிகழ்ச்சியின் நிறைவில், சிகிச்சை ஆன்காலஜி தலைவர் டாக்டர் சிவகுமார் நன்றி உரையாற்றினார்.

# மோடியின் தொழில் மகள் திட்டம் மூலம் கோவையில் பெண்களுக்கு உதவி!

● கோவை



கோவைமாநகர பாஜகசார்பில், பிரதமர் நரேந்திர மோடியின் 75–வது பிறந்தநாளை முன்னிட்டு, 'மோடியின் தொழில் மகள்' என்ற நிகழ்ச்சி கணபதி பகுதியில் உள்ள வாஜ்பாய் திடலில் நடைபெற்றது. இந்நிகழ்வில், 1,500 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள், கிரைண்டர்கள், ஆட்டோக்கள் போன்ற 18 வகையான இலவச தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மேலும், பா.ஜ.க.வின் தமிழிசை சௌந்தரராஜன், வானதி சீனிவாசன், நயினார் நாகேந்திரன், அரவிந்த் மேனன், மற்றும் அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களான கே.ஆர். ஜெயராமன், அம்மன் அர்ஜுனன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி பேசுகையில், இந்தியாவில் 2014–ல் 23 சதவீதமாக இருந்த பெண்களின் வேலைவாய்ப்பு தற்போது 42 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றார். பிரதமர் ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் பயனாளிகளில் 73% பெண்கள் எனவும், தமிழக அரசு மத்திய அரசின் திட்டங்களைச் சரியாகச் செயல்படுத்துவதில்லை எனவும் குற்றம்சாட்டினார்.

மேலும், ஜிஎஸ்டி வரி சீர்திருத்தத்தால் உணவுப் பொருட்களின் விலை குறைந்திருப்பது பொதுமக்களுக்குப் பயனுள்ளதாக அமைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.



# நவம்பர் முதல் இ-பாஸ் கட்டாயம் உயர்நீதிமன்றம் அதிரடி

கோடை காலத்தில் சுற்றுலாப் பகுதிகள் அதிகம் கொண்ட நீலகிரி மாவட்டத்திற்கும் கொடைக்கானல் மலைப்பகுதியை உடைய திண்டுக்கல் மாவட்டத்திற்கும் பிற மாவட்டங்களில் இருந்து வரும் வாகனங்களின் அளவை கட்டுக்குள் வைக்க இ–பாஸ்நடைமுறைசென்னை உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் அமல்படுத்தப்படுகிறது.




ஒரே நேரத்தில் மலைப் பகுதிகளுக்கு அதிக அளவில் வாகனங்கள் சென்றால் உள்ளூர் மக்களின் வழக்கமான நடமாட்டம் பாதிக்கப்படும், சுற்றுச்சூழலுக்கும், விலங்குகளுக்கும் கூட பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் இப்படி ஒரு நடைமுறை அமல்படுத்தப்பட்டது. அந்த வகையில், கோவை மாவட்டம் வால்பாறையிலும் இந்த இ–பாஸ் நடைமுறையை அமல்படுத்த சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நவம்பர் 2025 முதல் இது அமல்படுத்தப்படும் என தெரியவருகிறது. https://epass.tnega.org/ என்ற முகவரியில் பிறமாநிலத்தை சேர்ந்தவர்கள் வால்பாறைக்குள் வாகனங்களில் வரும்போது முறையாக பதிவு செய்த பின்னர் தான் வரமுடியும்.

# கோவையில் க்ரீம் ஸ்டோன் ஐஸ்கிரீம் தனது புதிய கிளையை தொடங்கியது



● கோவை

இந்தியாவின் மிகவும் பிரபலமான மற்றும் புதுமையான ஐஸ்கிரீம் பிராண்ட் க்ரீம் ஸ்டோன் ஐஸ்கிரீம், கோவை சாய்பாபா காலனியில் தனது புதிய மற்றும் மிகப்பெரியகிளையை தொடங்கியுள்ளது.

க்ரீம் ஸ்டோன் தனது சிக்னேச்சர் ஸ்டோன்–கிராஃப்டட் க்ரியேஷன்களால் மக்கள் ஐஸ்கிரீமை அனுபவிக்கும் முறையை மாற்றியமைத்துள்ளது. கடைசி ஸ்பூன் வரை க்ரீமி –ஆக இருக்கும் அனுபவத்தை வழங்குவதோடு, தரம் மற்றும் சரியான விலை ஆகியவற்றை இணைத்து, குடும்பங்கள், இளைஞர்கள் மற்றும் dessert ரசிகர்களின் மனதையும் கவர்ந்துள்ளது. மேலும், இது 100% vegetarian ஆகும். சாய்பாபா காலனியில் திறக்கப் பட்டுள்ள இந்த புதிய ஷாப் வெறும் ஐஸ் க்ரீம் ஷாப் மட்டுமல்ல - இது 1,000 சதுர அடியில் அமைந்த வண்ணமயமான, விசாலமான இடமாகும். மெல்லிய இசை, வசதியான இருக்கைகள் மற்றும் அன்பான சூழல் கொண்டு, ஒவ்வொரு வருகையையும் மறக்க முடியாத நினைவாக மாற்றுகிறது.




**சாய்பாபா காலனியில் 1,000 சதுரடியில் பிரமாண்ட ஐஸ்கிரீம் ஷாப்**

இந்த இடத்தை சமூகத்திற்காக உருவாக்க எங்கள் மனதார முழுமையாக ஈடுபட்டுள்ளோம். உரிமையாளராக, தரமும் சேவையும் குறையாமல் இருப்பதை உறுதி செய்கிறேன். எங்கள் ஊழியர்கள் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்கப் பயிற்சி பெற்றவர்கள். இரண்டு சக்கர வாகனங்களுக்கும் நான்கு சக்கர வாகனங்களுக்கும் போதுமான பார்க்கிங் வசதி ஏற்பாடு செய்துள்ளோம்; அதனால் வாடிக்கையாளர்கள் எந்த சிரமமும் இல்லாமல் வரலாம். விரைவில், காரிலிருந்தே ஆர்டர் செய்யும் சேவையையும் தொடங்குகிறோம் - நீங்கள் வந்து, காரிலிருந்தே ஆர்டர் செய்து ஐஸ் க்ரீமை சுவைக்கலாம்," என்று சாய்பாபா காலனி பிரான்சைஸிஸ் உரிமையாளர் திவ்யா சுரேஷ் தெரிவித்தார்.


என்.எஸ்.ஆர். சாலையில், ஆஞ்சநேயா பழமுதிர் கடைக்கு எதிரிலும், கரூர் வயஸ்யா வங்கியின் அருகிலும் அமைந்துள்ள இந்த ஷாப், அனைவரும் எளிதில் அடையக்கூடிய சிறந்த இடத்தில் உள்ளது. "இந்த இடத்தை எங்கள் அன்பும் அக்கறையும் கொண்டு வடிவமைத்துள்ளோம் - க்ரீம் ஸ்டோனை உங்கள் மகிழ்ச்சியான தருணங்களின் ஓர் அங்கமாக்குங்கள்," எனவும் திவ்யா குறிப்பிட்டார்.

# கோலாகலமாக நடந்த தின இதிகை வார இதழ் வெளியீட்டு விழா !


மிமிக்ரி ஈரோடு சஞ்சய்


தின இதிகை குழுவினர்


மணிகண்டன் அடிசியா நிறுவனர்


லயன்ஸ் கர்ணன்


பன்ஷி ராவல்


தின இதிகை முதல் பதிப்பு வெளியீடு


ஓவியா


சாந்தாமணி பட்டிமன்ற பேச்சாளர்


ஸ்ரீ நிருத்ய அர்ப்பண குழுவினர்


குத்துவிளக்கு ஏற்றி விழாவினை துவங்கிவைத்தவர்கள்


கர்னல் திரு.பாஸ்கரன்


அக்ஷரா




துர்கா லட்சுமி குழுவினர்


முகுந்தன் உடன் தின இதிகை குழுவினர்


விழாவில் பங்கேற்றவர்கள்




இயக்குனர் அமுதவாணன் உடன் தின இதிகை குழுவினர்

● கோவை

கோவை ஆவாரம்பாளையத்தில் அமைந்துள்ள கோஇந்தியா அரங்கத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் 23-ம் தேதி இ-பிஹைண்டு குழுமத்தின் பிரத்யேக வார இதழான "தின இதிகை" வெளியீட்டு விழா கோலாகலமாக நடைபெற்றது.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக அடிசியா நிறுவன மேலாளர் மணிகண்டன், பட்டிமன்ற பேச்சாளர் சாந்தாமணி, மேலாண்மை இயக்குனர் கர்னல் டாக்டர்.பாஸ்கரன், ஸ்போர்ட் ஸ்லேண்ட் சஞ்சய் ஜான்சன், க்யூரா விஷுவல் கிரியேட்டர்ஸ் பன்சி ராவல், அக்ஷயம் அறக்கட்டளை நிறுவனர் கர்ணன் ஆகியோர் பங்கேற்று விழாவை சிறப்பித்தனர்.

உஷா சந்திரசேகரன்,சியாமளா சரவணன், அபிராமி சதீஷ்குமார், சொர்ணா சக்திவேல், ராஜலட்சுமி ஜெகநாதன், ஸ்ரீ நந்தினி பார்த்திபன், சூர்யா பாலமுருகன், விஜயலட்சுமி பிரசன்னா, உமா மஹேஸ்வரி, வைஷ்ணவி அருண்காந்த் ஆகியோர் குத்து விளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தனர்.

"தின இதிகை" வார இதழின் நிர்வாக இயக்குனர் சதீஷ்குமார் விழா வரவேற்புரையாற்றினார்.இவரைத் தொடர்ந்து குழுவின் அறிமுக உரையை ஸ்ரீதர், சக்திவேல், பார்த்திபன், பிரசன்னா, பாலமுருகன், செந்தில்குமார், நவீன், பிரகாஷ், சௌமியா பிரகாஷ், உமா மஹேஸ்வரி ஆகியோர் வழங்கினர்.

தமிழ் தாய் வாழ்த்தினை சங்கீத இசை மணி சங்கீத ரத்னா துர்கா லட்சுமி குழுவினர் பாடினர். ஸ்ரீ நிருத்ய அர்ப்பண, பேபி ஓவியா,பேபி அக்ஷரா சக்திவேல், தாரிகா ஸ்ரீ, ஈரோடு சஞ்சய், ஐடிசி டான்ஸ் ஸ்டுடியோ ஆகியோர் சிறப்பான நடன நிகழ்ச்சியை வழங்கி பார்வையாளர்களை மகிழ்வித்தனர்.

விழாவில் பேசிய பட்டிமன்றப் பேச்சாளர் சாந்தாமணி அவர்கள், தனது இயல்பான நகைச்சுவை கலந்த பேச்சால் கூட்டத்தை சிரிப்பு மழையில் நனைய வைத்தார்.

''உலக அளவில் ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு சிறப்புகள் உண்டு. இத்தாலிய மொழி - இசை மொழி,பிரெஞ்சு மொழி – காதல் மொழி, இங்கிலாந்து மொழி - வணிக மொழி, கிரேக்க மொழி - தத்துவ மொழி, உருது மொழி – கவிதை மொழி,சமஸ்கிருதம் – தெய்வ மொழி. தமிழ் மொழி மட்டும் தான் தாய்மொழி. "தாய் மொழியாம் தமிழையும், தாய் தந்தையரையும் வணங்கி மகிழ்ந்து தின இதிகை வார இதழின் வெளியீட்டு விழாவிற்கு நல்ல வரவேற்புரை வழங்கிய அதன் நிறுவனர் தம்பி சதீஷ்குமார் அவர்களுக்கும், அழகாக அறிமுக உரை ஆற்றிய ஸ்ரீதர், சக்திவேல், பார்த்திபன், பிரசன்னா, பாலமுருகன், செந்தில் குமார், நவீன் ஆகியோருக்கும் "தின இதிகை" குழுமத்தின் உறுப்பினர்களான ஜெகதீசன், ஷங்கர் பாபு, கௌதம், உமா மகேஸ்வரி, பிரபு, அருண், சௌமியா, பிரகாஷ், ஜெயக்குமார், சக்திவேல், அபிராமி, ஜெயலட்சுமி, வினோதினி மற்றும் குழு உறுப்பினர்கள் வெங்கட்ராமன் , முத்து, சுப்ரமணியம், தியாகராஜன் ஆகியோரும் "இன்னும் யாரேனும் பெயர் விட்டுப் போயிருந்தால் அடுத்த ஆண்டு என்னையே அழையுங்கள், அதில் எல்லோர் பெயரையும் சேர்த்துச் சொல்லிவிடுகிறேன்" என்று அரங்கை சிரிப்பில் ஆழ்த்தினார். இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்த ஒருங்கிணைப்பாளர்களுக்கு நாமெல்லாம் கரவொலி எழுப்பி கவுரவிக்க வேண்டும். என்றார்.

அத்துடன் ஒரு குட்டிக்கதையை கூறிய சாந்தாமணி, ஒரு கோடாரி ஒருவர் கிணத்துக்குள் மாட்டிக் கொள்ள, அப்போது கோடாரி, தேவதையை கூப்பிட தேவதையோ அந்த கோடாரியை சிலரின் பெயர்களை கூறியபோது, "வேண்டாம்" என மறுத்த அந்த கோடாரி, "பத்திரிகையாளரை அனுப்புங்கள், அவன்தான் இந்த சமுதாயத்தில் விழுந்து கிடக்குற மக்களை உயர்த்திப் பிடிப்பது பத்திரிக்கைக்காரனால்தான் சாத்தியம்" என கூறி தனது உரையை முடித்தார்.

அடிசியா நிறுவனர் மணிகண்டன் அவர்கள் பேசும்போது பத்திரிகை என்பது ஒரு சாதாரணத்தொழில் மாதிரி எளிதான விஷயமல்ல. பத்திரிகையில் உண்மையும் ,நேர்மையும் இருந்தால் மட்டுமே மக்களின் மனதில் நிற்க முடியும். ஒரு பத்திரிகை உண்மையற்றதாக இருந்தால், மக்கள் அதை வாங்கிப் படிக்க மாட்டார்கள். அதில் நம்பிக்கையையும், நேர்மையையும் சம்பாதிப்பது மிகவும் கடினம். எனவே அதை உணர்ந்து செயல்பட வேண்டியது பத்திரிகையாளர்களின் ஒவ்வொருவரின் கடமை. அந்த கடமையை இவர்கள் சிறப்பாகச்செய்வார்கள் என நம்புகிறேன் என்றார்.

கோவை அக்ஷயம் அறக்கட்டளை நிறுவனர் டாக்டர் கர்ணன் அவர்கள் பேசும்போது "நாளைய இந்தியா இளைஞர்கள் கையிலுள்ளது என்றார் அப்துல் கலாம், அதை நிறைவேற்றும் வகையில் இன்றைய இளைஞர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இது மக்களுக்கான சிறந்த செய்தித்தாளாக வரவேண்டும். என்றுகோவைஅக்ஷயம்அறக்கட்டளை சார்பாக,வாழ்த்துகிறேன்," என்றார்.

கர்னல் டாக்டர். பாஸ்கரன் அவர்கள் பேசும்போது "தின இதிகை" வார இதழுக்கு எனது வாழ்த்துக்கள். சமூக ஊடகங்களில் நிரம்பி வழியும் செய்திகள் தாண்டி, மக்களுக்குப் பயனுள்ள செய்திகளை வெளியிடுவார்கள் என நம்புகிறேன்.மேலும் உண்மையான செய்திகளை ஆராய்ந்து, அவர்களின் கருத்தை பிரதிபலிக்கும் இடமாக இருக்கும் என நம்புகிறேன் என்றார்.

க்யூரா விஷுவல் கிரியேட்டர்ஸ் நிறுவனத்தின் தலைவர் பன்சி ராவல் உரையாற்றும் போது "தின இதிகை" குழுமத்தினரை வெகுவாக பாராட்டிப்பேசினார்.

சதீஷ்குமார், ஸ்ரீதர், சக்திவேல், பார்த்திபன், பிரசன்னா, பாலமுருகன், செந்தில்குமார், நவீன், ஜெகதீசன், ஷங்கர்பாபு, கௌதம், திரு.உமா மகேஸ்வரி, பிரபு, அருண், சௌமியா, பிரகாஷ், ஜெயக்குமார், வெங்கட்ராமன், முத்து, சுப்ரமணியம், தியாகராஜன் ஆகியோரின் ஏற்பாட்டில் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

## உள்ளங்கையை அழுந்த தட்டினால் மாரடைப்பு வராது

### பட்டிமன்ற பேச்சாளர் சாந்தாமணி "கல கல" பேச்சு

பட்டிமன்ற பேச்சாளர் திருமதி.சாந்தாமணி பேசும் போது "ஜெர்மனியில் ஒரு டாக்டர் ''உள்ளங்கையை அழுந்த தட்டினால் மாரடைப்பு வராது'' என்று கண்டுபிடித்துள்ளார் ''ஏன் நான் உள்ளூர் டாக்டர் சொல்லாம, நான் ஜெர்மன் டாக்டர் என்று சொன்னேன் தெரியுமா?உள்ளூர் டாக்டரை சொன்னால் அவர் யார், அவர் பேரென்ன என்று விசாரிக்க ஆரம்பிச்சிருவீங்க. ஆனா ஜெர்மன் டாக்டர்ன்னு சொன்னா ஜெர்மனி போயா விசாரிக்க போறீங்க, இருந்தாலும் இது உண்மைதான்"என்று நகைச்சுவையாக குறிப்பிட்டார்.



# மொபைல் போன்களால் குழந்தைகள் படும் பாடு

இன்றைக்கு எல்லாருடைய வீட்டிலும் இணைய வசதியுடன் குழந்தைகள் கைகளில் டேப் அல்லது மொபைல் இருப்பதைக் காணமுடிகிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் வெளியில் செல்லும் போதெல்லாம், தங்களது மொபைலை குழந்தைகளுக்கு விளையாடக் கொடுத்துவிடுகின்றனர், காரணம் அப்போதுதான் குழந்தைகள் அவர்களைத் தொந்தரவுசெய்ய மாட்டார்கள். இந்தத் தவறான வழக்கம் குழந்தைகளை மொபைல் போன்களுக்கு அடிமையாக்கிவிடுகிறது .

வெளியில் செல்லும்பொழுது மொபைல் எப்படி உடன் வருவது கட்டாயமாகியுள்ளதோ, அதேபோல கதைப் புத்தகம், வினாடி வினா புத்தகம், புனைகதைப் புத்தகங்கள், செய்தித்தாள் என ஏதாவது அறிவுச் சார்ந்த ஒன்றை நாம் கொண்டு செல்வது கட்டாயமாக பின்பற்ற வேண்டிய ஒன்றாகும். கிடைக்கும் இடைவெளியில் அதை அவர்களிடம் கொடுத்தால் படிக்கும் பழக்கத்தை வளர்க்க முடியும். அதில் இருக்கும்சில புதிர்கள், சுடோகு, குறுக்கெழுத்துக்கள் போன்றவற்றை அறிவை வழக்கவும் நேரம் போகவும் உதவும் . பெற்றோர்கள் குழந்தையிடம் போகும் இடத்தைப் பற்றியும் அதன் வரலாறுகளைப் பற்றியும் விளக்கலாம் .இதன் மூலம் குழந்தை அனைத்துத் துறைகளை பற்றிய அறிவைப் பெறுகிறது.இப்போதெல்லாம் குழந்தைகள் வெளியில் விளையாடுவதையும், அவர்களின் கற்பனைத்திறனை வளர்க்கும் வாய்ப்பையும் இழக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து மொபைல் கேம்களில் அடிமையாவதால் நரம்பியல் மற்றும் உறவுமுறை வளர்ச்சியைத் தடுக்கிறது, ஏனெனில் தொழில்நுட்பத்தை மிக இளம் வயதிலேயே அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. இதனால் வெளியே சென்று விளையாடும் நாட்டம் குறைகிறது. இது நம் குழந்தைகளின் உடல் வலிமை பாதிப்பதைத் தாண்டி நம் குழதைகளின் மனதையும் அதிகம் பாதிக்கிறது என்பதை பெற்றோர்கள் உணரவேண்டும்.

மொபைல்களுக்கு அடிமையாவதால் அதிக மன அழுத்தம் மற்றும் பதற்றம் ஏற்படுகிறது. இன்னும் சில குறைபாடுகள் என்னவென்றால், அவர்களின் உணவுப் பழக்கம் சீர்குலைந்து விடுகின்றனர். படிப்புகள் மோசமடையும், தேவையற்ற எண்ணங்கள் ஏற்படும், பார்வைக் குறைபாடுகள் ஏற்படும், தோல் நோய்களை ஏற்படுத்தும், குறிப்பாக கை சம்பந்தமான நோய்கள், புற்றுநோய் மற்றும் கண் பிரச்சனைகள் போன்றவை அதிகமாக பாதிப்பதாக கூறப்படுகிறது . மேலும் பல நோய்கள் அதன் அதிக பயன்பாடு மூலம் உடலை பாதிக்கப்படுகிறது.

மொபைல் ஃபோன் மக்களை இணைக்க வடிவமைக்கப் பட்ட ஒரு கருவி , ஆனால் உண்மையில் நம்மை ஒருவரிடம் இருந்து மேலும் பிரித்து வைக்கும் ஒரு கருவியாக தற்போது செயல்படுகிறது . முதலில் வீட்டிலுள்ள பெரியவர்கள். பெற்றோர்கள் இந்த மொபைல் ஃபோன்களை அதிகம் பயன்ப் படுத்துவதை குறைத்துக் கொள்ள வேண்டும். உங்கள் மொபைல் போன்களை தொடர்ந்து பயன்படுத்துவதால் உங்கள் விரல்கள் மற்றும் முதுகெலும்பு பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும். ஆர் எப் கதிர்வீச்சு ஒரு மிகப்பெரிய ஆபத்து, மொபைல் ஃபோன்களை நாம் அதிக நேரம் பயன்படுத்து மிகவும் தவறானது என்பதை முதலில் நாம் உணரவேண்டும் . அதுமட்டும் இன்றி அதை அதிக நேரம் பயன்படுத்தி உங்கள் நேரத்தை வீணாக்குவதை தடுக்க வேண்டும். முடிந்த அளவும் மொபைல் போன்களை குறைவாக பயன்படுத்த முயற்சி செய்யுங்கள் மற்றும் உங்கள் நேரத்தை மிச்சப்படுத்துங்கள், உங்கள் குழந்தைகளுக்கும் இதையே சொல்லிக் கொடுங்கள், பல நல்ல வழிகளில் நேரத்தை செலவிடுங்கள்.



✍ ஆர்.ஜெயதீர்த்தன்
கணினி அறிவியல் ஆசிரியர்
SBOA மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
கோவை-39.



# சிறப்பு பல் சிகிச்சை முகாமில் 300 குழந்தைகளுக்கு பரிசோதனை

● திருப்பூர்





குளோபல் கிட்ஸ் நம்பர் ஒன் ப்ரீ ஸ்கூல் ஸ்பெஷலிஸ்ட் பள்ளி, தின இதிகை வார இதழ் மற்றும் ஷைன் பல் மருத்துவமனை ஆகியவை இணைந்து நடத்திய சிறப்பு பல் பரிசோதனை முகாம் கடந்த 2,3 மற்றும் 4 ஆகிய தேதிகளில், திருப்பூர் 15 வேலம்பாளையம் பி.என் ரோடு – பாண்டியன் நகர் மற்றும் மேட்டுப்பாளையம் என்னும் மூன்று இடங்களில் அமைந்துள்ள குளோபல் கிட்ஸ் பள்ளியில் நடைபெற்றது.

இந்த முகாமில் 2 முதல் 5 வயதிற்குட்பட்ட சுமார் 300–க்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் பங்கேற்று பல் பரிசோதனை செய்து கொண்டனர். மருத்துவக் குழுவினர் குழந்தைகளின் பற்களை ஆராய்ந்து பெற்றோர்களிடம் ஆலோசனைகள் வழங்கினர்.

மருத்துவர்கள், குழந்தைகளுக்கு பல் துலக்கும் முறைகளை செய்து காண்பித்த தோடு, பல் துலக்கும் பயிற்சியும் அளித்தனர். மேலும் தினமும் 2 முறை பல் துலக்குதல், குறைந்தபட்சம் 3 மாதங்கள் முதல் 6 மாதங்களுக்கு ஒரு முறை பல் பரிசோதனை செய்து கொள்ளுதல், பற்களை பாதுகாத்தல் முதலிய பல்வேறு விஷயங்கள் குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

இதில் பல பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளின் பற்கள் தொடர்பான சந்தேகங்களை மருத்துவர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டனர்.

# அபராத தொகையை கட்டினால்தான் இனி இன்சூரன்ஸ்!



விதிமீறலில் ஈடுபட்ட வாகனங்கள் பணம் செலுத்தாமல் இருந்தால் வண்டியின் இன்சூரன்ஸ் புதுப்பிக்க முடியாது என்ற புதிய நடைமுறையைக் கொண்டு வந்ததுள்ளது சென்னை மாநகரகாவல்துறை.

வாகனங்களின் பெருக்கம் அதிகரித்து வரும் நிலையில், விதிமீறல் சம்பவங்களும் அதிகம் நடக்கின்றன. விதிமீறல்களில் ஈடுபடும் வாகன ஓட்டிகளிடம் போலீசார் அபராதம் விதித்து வருகின்றனர். நேரடி அபராதம் மட்டுமின்றி, ஆங்காங்கே அதிநவீன கண்காணிப்பு கேமராக்களைப் பொருத்தியும், விதிமீறலில் ஈடுபடும் வாகன ஓட்டிகளை கண்காணித்து அபராதம் விதிக்கப்படுகிறது.அதன் அபராதத்தொகையை இணையத்தளம் மூலம் கட்டும் வசதி இருந்தாலும் அதை செலுத்த பலரும் தவறுவதால் போக்குவரத்து விதிமீறலுக்காக விதிக்கப்பட்ட அபராத நிலுவை சுமார் ரூ.300 கோடி வரை பாக்கி இருப்பதாக கூறப்படுகிறது. இந்த நிலுவைத் தொகையை வசூல் செய்யும் பொருட்டு, காப்பீட்டு நிறுவனங்களுடன் சேர்ந்து சென்னை மாநகரக் காவல்துறை புதிய நடைமுறை நடவடிக்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சாலை விதிமீறலில் ஈடுபட்டு அபராத தொகையை செலுத்தாத வாகனங்களுக்கு, இனி இன்சூரன்ஸ் கட்டணத்துடன் அபாரதத் தொகையையும் செலுத்தும் வகையில், போலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.




# 88 லட்சமாக உயர்ந்த எச்1பி விசா கட்டணம்!

## அதிர்ந்த நிறுவனங்கள், அப்படி என்ன முக்கியத்துவம்?

பொதுவாகவே நாம் ஒரு நாட்டில் இருந்து வேறொரு நாட்டுக்குச் செல்ல அந்த நாடு அரசு அனுமதி வழங்குவது தான் விசா எனப்படும். அமெரிக்காவில் வேலை செய்வது பலரின் கனவு . அந்தக் கனவை நிறைவேற்றுவதற்கு முக்கிய வாயிலாக விளங்குவது எச்-1 பி (H1B) விசா . அமெரிக்க நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான ஐ.டி., மென்பொருள், மருத்துவம், பொறியியல், ஆராய்ச்சி போன்ற துறைகளில் சிறப்பு திறன்கள் கொண்ட வெளிநாட்டு நிபுணர்களை வேலைக்கு அழைக்கும் போது, இவ்விசா ( எச்-1 பி) வழங்குவது முறையானதாகும் . 1990 களில்

மென்பொருள் தேவைகள் அதிகமாக இருந்ததால் வெளிநாடுகளில் இருந்து சிறப்பு திறன்கள் கொண்ட நிபுணர்களை வேலைக்கு அழைக்க அமெரிக்க அரசு முன்வந்தது அவர்களை நாட்டுக்குள் வர அனுமதிக்க 1990 ஆண்டு அப்போதைய அதிபர் ஜோர்ஜ் புஷ் எச்-1 பி விசாவுக்கு அனுமதி கொடுத்தார். பொதுவாக இந்த விசா மூன்று ஆண்டுகள் செல்லுபடியாகும், அதிகபட்சம் ஆறு ஆண்டுகள் வரை நீட்டிக்க முடியும். எச்-1 பி விசா வைத்திருப்பவர்களுக்கு அமெரிக்காவில் சட்டப்பூர்வமாக வேலை செய்யும் உரிமை கிடைக்கப் பெறுகிறது . மேலும், க்ரீன் கார்டு (நிரந்தர குடியுரிமை) பெறும் பாதையையும் இந்த விசா மூலமே சாத்தியமாகும் .




### கோல்டன் கார்டுக்கு 8.8 கோடி டிரம்ப் அறிவிப்பு

வெளிநாட்டு ஊழியர்களை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்களுக்கு டிரம்ப் கார்ப்பரேட் GOLD CARD மூலம் 2 மில்லியன் டாலர் (ரூ.17.5 கோடி) விலை நிர்ணயிக்கப்படும் எனவும் டிரம்ப் அறிவித்துள்ளார். மேலும், அமெரிக்க வரிகள், வருமானம் போன்ற எந்த நிபந்தனையுமின்றி அமெரிக்காவில் 270 நாட்கள் வரை தங்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### யாருக்கு அதிகம் பயன்?

இந்தியாவில் இருந்து பெரும்பாலான மென்பொருள் மற்றும் ஐ.டி. நிபுணர்கள் ஆண்டுதோறும் எச்-1 பி விசா பெற்று அமெரிக்காவுக்கு செல்கின்றனர். அதோடு, மருத்துவர்கள், பொறியாளர்கள், விஞ்ஞானிகள், நிதி மற்றும் கல்வித்துறை நிபுணர்கள் என பலர் பயன்பெறுகின்றனர் . இந்த விசாவின் மூலம் உயர் சம்பள வேலை, உலகளாவிய அனுபவம், தொழில் முன்னேற்றம் ஆகியவை கிடைக்கின்றன. மேலும், விசா வைத்திருப்பவர்களின் குடும்பத்தினர் H4 விசா மூலம் அமெரிக்காவில் தங்கலாம்.

இந்த சூழலில் அமெரிக்க அதிபர் டிரம்ப் சமீபத்தில் ஒரு அறிவிப்பை வெளியிட்டு அதில் கையெழுத்திட்டு உள்ளார். இனி எச்1பி விசா பெற நபர் ஒருவருக்கு ஆண்டுக்கு 1 லட்சம் டாலர், அதாவது இந்திய மதிப்பில் 88 லட்சம் கட்டவேண்டும் என்ற அதிரடியான அறிவிப்பை வெளியிட்டார் . இதற்கு முன் 1.32 லட்சமாக இந்த கட்டணம் இருந்தது. இது பலரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது இதற்கு பலரும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர் . இந்த நிலையில் வெள்ளை மாளிகை செய்திச்செயலாளர் கரோலின் லீவிட் வெளியிட்டுள்ளச் செய்தியில் இது ஒருமுறை செலுத்தும் கட்டணம் என்றும், புதிய விசாக்களுக்கு மட்டுமே பொருந்தும், புதுப்பித்தலுக்கோ, தற்போதைய விசா வைத்திருப்பவர்களுக்கோ அல்ல" என்றும் கூறினார். ஏற்கனவே (H1B)விசா வைத்திருப்பவர்களும் தற்போது அமெரிக்காவிற்கு வெளியே இருப்பவர்களும் நாட்டிற்குள் நுழைய 1 லட்சம் அமெரிக்க டாலர் கட்டணம் வசூலிக்கப்படாது என்று அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டார்.

இருந்தபோதிலும் எச்1பி விசா கட்டண உயர்வு என்ற ட்ரம்ப்பின் அதிரடி நடவடிக்கை மூலம் அமெரிக்காவுக்கு பல விதங்களில் பின்னடைவும், இந்தியாவுக்கு பல வழிகளில் நன்மைகளும் ஏற்படும் என்று வர்த்தக மற்றும் தொழில்நுட்ப துறை வல்லுநர்கள் கூறுகின்றனர்.

# யங் இந்தியன் கோவையில் எக்ஸ் ஃபேக்டரின் 9-வது பதிப்பு ஏற்பாடு

● கோவை

இந்திய தொழில் கூட்டமைப்பின் (CII) கோவை மண்டலத்தின் இளைஞர் பிரிவான young Indians (Yi) கோவை பிரிவு, சில திறமையான தலைவர்கள் மற்றும் ஊக்கமளிக்கும் திறமையாளர்களைக் கொண்ட X-Factor இன் 9வது பதிப்பை ஏற்பாடு செய்தது.

சனிக்கிழமை கோவை நகரில் உள்ள மெர்லிஸ் ஹோட்டலில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் கோவையைச் சேர்ந்த 300 Yi உறுப்பினர்கள் மற்றும் திருப்பூர், ஈரோடு, சேலம், மதுரை, திண்டுக்கல், காஞ்சிபுரம் போன்ற இடங்களிலிருந்தும் பலர் கலந்து கொண்டனர்.

யங் இந்தியன்ஸ் பிரிவுத் தலைவர் நீல் கிகானி கூட்டத்தை வரவேற்றார். Yi கோவை கற்றல் தலைவர் வைஷ்ணவி ஜனனி நிகழ்ச்சியின் சூழலை அமைத்தார்.

இந்தக் கற்றல் மாநாட்டில் பேசியவர்களில் டைட்டன் லிமிடெட்டின் முன்னாள் நிர்வாக இயக்குநர் பாஸ்கர் பட், இஸ்ரோவின் போர் விமானி மற்றும் இந்திய விண்வெளி வீரர் குரூப் கேப்டன் பி.பி. நாயர்; ஆட்டோகார் நிறுவனர் மற்றும் தலைமை ஆசிரியர் ஹார்மஸ்த் சோராப்ஜி; காரிடார் செவன் காபி ரோஸ்டர்ஸின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி மிதிலேஷ் வாசல்வார்; AI ப்ராடிஜியின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ரவுல் ஜான் அஜு; இந்தியா பிரைட் திட்டத்தின் இணை நிறுவனர் விஜய் குமார்; உத்தி ஆலோசகர், தலைமைத்துவ பயிற்சியாளர் மற்றும் டெட்எக்ஸ் பேச்சாளர் லெப்டினன்ட் ஜெனரல் அனந்தநாராயணன் அருண் ஆகியோர் அடங்குவர். அவர்கள் தங்கள் பயணம், அவற்றில் உள்ள சவால்களைப் பகிர்ந்து கொண்டு பங்கேற்பாளர்களை ஊக்கப்படுத்தினார்.

"எக்ஸ்ஃபாக்டர் தனித்துவமான ஒன்று – சிறந்த ஒன்றைத் தொடர சில கூடுதல் மைல்கள் நடந்து சென்று அந்தந்தத் துறைகளில் அசாதாரண முன்னேற்றம் அடைந்த சில விதிவிலக்கான நபர்கள் எங்களிடையே உள்ளனர். அத்தகையவர்களை ஒன்றிணைத்து, அவர்களிடமிருந்து சில மதிப்பு மிக்க பாடங்களை பார்வையாளர்கள் கற்றுக் கொள்ளும் வகையில், அவர்களை கூட்டத்தில் உரையாற்ற வைக்க நாங்கள் விரும்பினோம்," என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

யங் இந்தியன் கோயம்புத்தூரின் இணைத் தலைவர் ராகுல் காமத் இறுதி உரையை நிகழ்த்தினார்.






● கோவை மாநகரில் உள்ள காந்திபுரத்தில் மத்திய சிறைச்சாலை மைதானம் அருகே தமிழ்நாடு அரசு சார்பில் ரூ.300 கோடி மதிப்பீட்டில், 1.98 லட்சம் சதுர அடி பரப்பளவில், 8 தளங்களுடன் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையத்திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

### கோவையில் ஜோராக நடக்கும்

# தந்தை பெரியார் நூலகம், அறிவியல் மையத்திட்ட பணிகள்

● கோவை

கோவை மாநகரில் உள்ள காந்திபுரத்தில் மத்திய சிறைச்சாலை மைதானம் அருகே தமிழ்நாடு அரசு சார்பில் ரூ.300 கோடி மதிப்பீட்டில், 1.98 லட்சம் சதுர அடி பரப்பளவில், 8 தளங்களுடன் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையத்திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

இதற்கான அடிக்கல் நாட்டு விழா நவம்பர் 2024ல் நடைபெற்றது. 2026 ஜனவரி மாதத்தில் இந்த நூலகம் கட்டிமுடிக்கப்பட்டு திறக்கப்படும் என முதலமைச்சர் இந்த திட்டத்தின் துவக்கத்திலேயே அறிவித்தார்.

தமிழக அரசின் பொதுப்பணி துறையால் கட்டப்பட்டு வரும் இந்த பணியை 2 மாதங்களுக்கு ஒரு முறை அமைச்சர் ஏ.வ.வேலு நேரில் வந்து பார்வையிட்டு, பணிகள் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை ஆய்வு செய்து வருகிறார்.கட்டுமான பணிகள் எல்லாம் ஜோராக நடந்து வருகிறது. தற்போது இந்த பணிகள் 40–50% நிறைவு பெற்றுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பிரம்மாண்ட நூலகம் மற்றும் அறிவியல் மையத்தில் ஒரு விசாலமான வரவேற்பு அறை, அறிவியல் மையம், கோளரங்கம், விண்வெளி லிப்ட் லாபி, விண்வெளி லிப்ட், கலையரங்கம், குழந்தைகளுக்கான நூலகம், மாற்றுத்திறனாளிகளுக்கான நூலகம், தமிழ் புத்தகப்பிரிவு, பருவ இதழ்கள், போட்டித் தேர்வுக்கான நூலகம், டிஜிட்டல் நூலகம், இன்குபேஷன் சென்டர் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் அமைகிறது.எந்த கோணத்தில் இருந்து பார்த்தாலும் இந்த கட்டிடம் ஒரு பிரம்மாண்டம் என்றே சொல்லவேண்டும். அந்த அளவிற்கு இதன் வடிவம் உள்ளது. ஒரு மிகப்பெரும் புத்தகத்தை திறந்து வைத்து, அதற்குள் படிக்கட்டுகள் செல்வது போல இதன் வடிவம் தோற்றத்தை ஏற்படுத்துகிறது. தற்போது இதன் கட்டமைப்பு (STRUCTURE) தொடர்பான பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது. இறுதித் தளத்தில் கூரை பணிகள் நடக்கின்றன.

முழுவீச்சில் தொய்வின்றி பணிகள் நடந்து வருகின்றது. இதன் இறுதியில் நிச்சயமாக கோவைக்கு ஒரு புது அடையாளமாக இது இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

படங்கள் : எஸ்.டேவிட் கருணாகரன்

### கோவையில் அறுசுவை உணவில் அசத்தும்

# சாய் பிருந்தாவன் உணவகம்!

● கோவை

பல நாட்கள் வீட்டினில் உணவை உண்டு மகிழ்ந்த நம் குடும்பங்கள் வார நாட்களில் அல்லது நேரம் கிடைக்கும் பொழுது வெளியில் சென்று உணவருந்தி மகிழ்வது வழக்கம். எப்பொழுதும் நல்ல உணவு மட்டுமல்ல, நல்ல அனுபவத்தையும் வழங்கும் உணவகம் தான் மக்கள் மனதில் என்றும் நீங்கா இடம் பிடித்திருக்கும் . அப்படிப்பட்ட அறுசுவை உணவு அனுபவத்தை வழங்கி, வாடிக்கையாளர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ள உணவகம் தான் சாய் பிருந்தாவன்.




### சுவையும் சத்தும் இணையும் இடம்

இங்கு வழங்கப்படும் உணவுகள் அனைத்தும் சுவையிலும், சத்திலும் சிறந்தவை. காலை முதல் இரவு வரை தினசரி டிபன், சாப்பாடு, சிற்றுண்டி வகைகள் அனைத்தும் சுத்தமாகவும் சுவையாகவும் தயாரிக்கப்படுகின்றன. பாரம்பரிய தென்னிந்திய சுவைகள், வடஇந்திய சிறப்பு வகைகள், சுவை மிகுந்த சைவ உணவுகள், என எதனை சுவைத்தாலும், "வீட்டுச் சுவை" என்ற உணர்வை தருவது இந்த உணவகத்தின் சிறப்பு. விலைமதிப்பில்லாத சுவையை தரத்துடன் இணைத்து வழங்குவதில் சாய் பிருந்தாவன் உணவகம் எப்போதும் சிறந்து விளங்குகிறது. "சிறந்த உணவு என்பது சுத்தத்திலும் சேவையிலும் தான்" என்ற கொள்கையைப் பின்பற்றி, ஒவ்வொரு உணவும் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்படுகிறது. சுவையில் சிறப்பு, சேவையில் சிரிப்பு" என்பதே சாய் பிருந்தாவனை பாராட்டும் வாடிக்கையாளர்களின் கருத்து.

சமீபத்தில் நடத்த ஒரு நிகழ்ச்சியில் பலரும் கலந்து கொண்டு சாய் பிருந்தாவன் உணவை உண்டு பாராட்டிச் சென்றனர் . இந்த நிகழ்வில் எங்கள் மனம் மட்டும் அல்ல உங்களது உணவால் வயிறும் சேர்ந்து நிரம்பியதாக விழாவுக்கு வந்தவர்கள் பலர் கூறிச் சென்றனர்.

மொத்தத்தில், அறுசுவை உணவின் நம்பகமான முகவரி – சாய் பிருந்தாவன் உணவகம் என வாடிக்கையாளர்கள் ஒருமித்துக் கூறுகின்றனர்.

குனியமுத்தூர், காந்திபுரம் மற்றும் ராமநாதபுரத்தில் சிறந்த முறையில் உணவு வழங்கும் உணவகமாக திகழ்கின்றது.





# வெள்ளமே வீட்டிற்குள் வராதே!

சுமதியும், மாலதியும் பக்கத்து வீட்டுக்காரர்கள். நல்ல தோழிகள், சுமதி! சுமதி! என்று மாலதி கூப்பிட்டாள். என்ன? என்று சுமதி வீட்டிற்கு வெளியேவந்து கேட்டாள்.

**மாலதி :** இப்படி தண்ணீர், வெள்ளம் வீட்டிற்குள் வந்தால் சமைப்பது எப்படி?

**சுமதி :** மதியம் சாப்பாடு என்ன செய்வது.. ஒரு ஐடியா! மாடி ரூமில் சமைக்கலாம். இருவரும் இரண்டு குடும்பத்திற்கும் சேர்ந்து சமைத்தார்கள். மாடியில் இருந்து எட்டிப்பார்த்தால், வெள்ளம் தண்ணீர் குறைந்து கொண்டிருந்தது. எப்படியும் சாயங்காலம் ஆகிடும் என்று இருவரும் பேசிக்கொண்டார்கள்.

**மாலதி :** சுமதி நீதான் M.Sc. Geography படித்தவள் ஆயிற்றே. எதாவது ஐடியா சொல்லு. ஒரு கடிதமாக பத்திரிக்கைக்கு அனுப்பலாம்.

**சுமதி:** இதை தின இதிகை பத்திரிக்கைக்கு அனுப்பலாம்.

**மாலதி:** ஏன்?

**சுமதி:** அவர்கள் செய்திகள் மட்டும் போடுவதில்லை, செயல் செய்திகளும் போடுவார்கள்.

**மாலதி:** சரி, அனுப்பிவிடு. Mean Sea Level (MSL) தண்ணீர் எப்படிப்பட்டது? அதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

**தண்ணீர் இரண்டு வகைப்படும்**
**1. சைலெண்ட் 2. ஆக்ரோசம்.**

**சைலெண்ட் :** ஒவ்வாரு நாளும், பிறந்தநிமிடம், முதல் மூச்சு நிற்கும் வரை தாகம் என்ற உணர்வு நம்மை ஆட்டுவிக்கும். அந்த நேரம் தண்ணீர் தான்யார்? தன் பலம் என்ன என்பதை உணர்த்தும்.. உணர்த்திக்கொண்டே இருக்கும். இதில் பணக்காரன் – ஏழை, இளமையானவள் – முதுமையானவள் இப்படியாக மனித சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும் தண்ணீரின் சைலெண்ட் பலத்திற்கு அடங்கிப்போவார்கள்.

**ஆக்ரோசம் :** வெள்ளம், சுனாமி, அடைமழை, புயல்மழை, காட்டாற்று வெள்ளம் இப்படி பலவிதமாக அழைக்கப்படுகிறது. தண்ணீர் மெதுவாக ஓடினால் அதை சமாளிக்கலாம். அதுவே வேகமாக ஓடினால் அது வெள்ளம். பெரிய நகரம், சிறுநகரம், வயல்வெளிகள் மூழ்கிப்போகிறது, முடங்கிப்போகிறது. இலட்க்கணக்கானவர்கள் வாழ்க்கை தடை படுகிறது. உற்பத்தி செய்யும் வாருட்கள் கோடிக்கணக்கானவர்கள் வாழ்க்கையில் அவசியம் என்ற தேவைகளை பூர்த்தி செய்கிறது. இத்தனையும் வெள்ளத்தால பாதிக்கப்படுகிறது. ஆகதண்ணீர் ஒடுவதைப்புரிந்துகொள்ள வேண்டும். அதுதான் MEAN SEA LEVEL (MSL) இயக்கம். தண்ணீர் ஒட்டம் புரிதால் இயக்கம். இதன் மூலம் இந்தியாவில், தமிழ்நாட்டில் மனிதசமூகம் வாழவேண்டிய இடங்களை அமைப்பது எப்படி? என்பதை கண்டுபிடிப்பது, கண்டுபிடித்ததை கடைபிடிப்பது. நீங்கள் மழையில்லா காலங்களில் பல இடங்களுக்கு போய் வருகிறீர்கள்.

அப்பொழுது நிறைய இடங்களில் ஒரு காட்சியைப்பார்த்திருப்பீர்கள். ரோடு உயரத்திலும், வீடு தாழ்வாகவும் இருக்கும். இதை விபரம் தெரியாமல் வீடுகட்டிவிட்டார்கள் என்று வீடுகட்டியவர்களை இகழச்சியோடு பார்ப்பீர்கள். உண்மையில் அவர்கள் விபரம் தெரியாதவர்கள் அல்ல அரசாங்கம்தான் சரியாக விபரங்களைச் சேகரித்துத் தராமல் விட்டது. முதன்முதலாக வீடு கட்டுவோர்கள் ஒரு ஊரை வளர்க்கிறார்கள். அதன் பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருக்கிறார்கள்.

அரசாங்கம் தனது விவரம் சேகரிக்கும் முறையை தற்காலத்திற்கு ஏற்றவாறு மாற்றியிருந்தால் சாலையின் உயரம் என்ன? என்பது தெரிந்திருக்கும். முதலில் வீடுகட்டியவர்கள் அதை அறிந்து சரியான உயரத்தில் வீடுகளைக் கட்டியிருப்பார்கள். அதேபோல் சாக்கடை, தண்ணீர் குழாய்களை சரிவர அமைத்திருப்பார்கள். இதற்குதான் MEAN SEA LEVEL (MSL) இயக்கம். எந்த ஒரு பூமி விவசாயம் மற்றும் வீட்டுமனை அதற்கு (MSL) தேவை. ரோடுகளின் (MSL) தெரிந்தால் வீடுகளை தாழ்வாக கட்டமாட்டார்கள். விவசாய பூமி மற்றும் வீடுகளுக்குள் வெள்ளம் வராது.

✍ அ.வெங்கட்ராமன்
இராமநாதபுரம், கோவை



# பக்கவாதம் ஆபத்துகளை அறிவது முக்கியம்!

பக்கவாதம் (ஸ்ட்ரோக்) இந்தியாவில் மரணங்களுக்கும் நீண்டகால ஊனமுற்ற தன்மைக்கும் முக்கிய காரணங்களில் ஒன்றாக உள்ளது. உலக சுகாதார நிறுவனம் (டபிள்யுஎச்ஓ) அளித்த தகவலின் படி, இந்தியாவில் ஒவ்வொரு லட்சம் மக்களில் சுமார் 49 பேர் பக்கவாதத்தால் உயிரிழப்பதாக தெரிவித்துள்ளது.

வருடத்திற்கு சுமார் ஒரு லட்சம் மக்களுக்குள் 105-152 பேருக்கு பக்கவாதம் ஏற்படுகிறது. இது "மூத்தவர்களுக்கு மட்டுமே" ஏற்படும் பிரச்சனை அல்ல; இளம் வயதினரும் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள்.

பெரும்பாலான பக்கவாதங்கள் வாழ்க்கை முறையுடனும் உடல்நலக் குறைபாடுகளுடனும் தொடர்புடையவை. அதிக இரத்த அழுத்தம், நீரிழிவு, புகை பிடித்தல், ஆரோக்கியமற்ற உணவு பழக்கம், உடற்பயிற்சி இல்லாமை, இதய நோய்கள் போன்றவை அபாயத்தை அதிகரிக்கின்றன. முறையான பரிசோதனைகள் மூலம் இவ்வாறான பிரச்சனைகளை ஆரம்பத்திலேயே கண்டறியலாம். இரத்த அழுத்தம், இரத்தச் சர்க்கரை, கொலஸ்ட்ரால் பரிசோதனை, இதய பரிசோதனைகள் உடல் எடை கண்காணிப்பு போன்றவை அவசியம். ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்றுவதன் மூலம் பக்கவாதத்தை பெரும்பாலும் தவிர்க்க முடியும்.

தினசரி நடைபயிற்சி, சைக்கிள் ஓட்டுதல் அல்லது எளிய உடற்பயிற்சிகள், காய்கறிகள், பழங்கள், முழுதானியங்கள் நிறைந்த சமநிலையான உணவு, புகை பிடிப்பதை நிறுத்துதல், மது அருந்துவதை கட்டுப்படுத்துதல், தியானம் அல்லது பொழுதுபோக்குகள் மூலம் மன அழுத்தத்தை கட்டுப்படுத்துதல் போன்றவை முக்கிய பங்கு வகிக்கின்றன. பக்கவாதம் ஏற்பட்டால் உடனடிமருத்துவசிகிச்சைமூளை செல்களை காப்பாற்றி கடுமையான ஊனமுற்ற நிலையைத் தவிர்க்க உதவும். பக்கவாதத்திற்குப் பிறகு உடற்பயிற்சி (பிஸியோதெரபி) மிக அவசியமானது.

தொடர்ச்சியான உடற்பயிற்சியின் மூலம், பல மாதங்கள் கடந்த பின்பும் நோயாளிகள் மீண்டும் நகரும் திறன் மற்றும் தன்னம்பிக்கை பெற முடியும். பக்கவாதம் தடுக்கக்கூடியதும், சிகிச்சை அளிக்கக்கூடியதும், மேலாண்மை செய்யக்கூடியதும் ஆகும். சரியான நேரத்தில் செயல்படுவது உயிரைக் காப்பதோடு மட்டுமல்ல, வாழ்க்கைத் தரத்தையும் காப்பாற்றும்.

✍ நந்தினி
பிசியோதெரபிஸ்ட்
சென்னை

# என்..ஜி.ஆர் பள்ளியில் என் எஸ் எஸ் சிறப்பு முகாம்!

● கோவை

தியாகி என்..ஜி.ஆர் நினைவு மேனிலைப்பள்ளி மற்றும் எஸ் .கே .என் அரசு மேல்நிலை பள்ளி, பீடம்பள்ளி ஆகிய பள்ளிகள் இணைந்து நடத்தும் நாட்டு நலப்பணித்திட்ட சிறப்புமுகாம், பள்ளபாளையம் அரசு உயர் நிலைப்பள்ளியில் செப்டம்பர் 26 முதல் அக்டோபர் 2 –ம் தேதி வரை நடைபெற இருக்கிறது.

இந்த நாட்டு நலப் பணித்திட்ட சிறப்பு முகாமில் பள்ளி, பூங்கா சுத்தம் செய்தல், எழுத்தறிவு இயக்கம், மரம் நடுதல், விழிப்புணர்வு பேரணிகள் நடைபெறுகின்றன. இதனை பள்ளபாளையம் பேரூராட்சி தலைவர் திரு. செல்வராஜ் துவங்கிவைத்தார். முன்னாள் கவுன்சிலர் திரு ரங்கசாமி, பீடம்பள்ளி, தலைமையாசிரியர் திரு. பரமசிவம், பள்ளபாளையம் தலைமையாசிரியர் திருமதி. புனிதாகுமாரி மற்றும் திட்ட அலுவலர்கள் திரு.ஸ்டாலின், திருமதி. தேவிகா, பள்ளி மாணவர்கள் ஆகியோர் சிறப்பு முகாமில் கலந்துகொண்டனர்.



தின இதிகை
எங்களை தொடர்பு கொள்ளுங்கள்
அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தனியார் அமைப்புகள், பள்ளி, கல்லூரிகள் தங்களது செய்திகள்/ நிகழ்ச்சிகள் அல்லது கட்டுரைகளை நமது இதழில் பதிய விரும்பினால்
9345 97 57 47
என்ற வாட்ஸ் அப் எண்ணுக்கு அல்லது
dinaidhigainews@gmail.com
மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

# கோவை சவுரிபாளையத்தில் அண்ணா பிறந்தநாள் விழா

## நலத்திட்ட உதவிகள் வழங்கிய அதிமுகவினர்

● கோவை

அதிமுக சார்பில் பேறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதி, சவுரிபாளையம் பகுதியில் உப்பிலிபாளையம் பூங்கா திடலில் நடைபெற்றது,

இந்நிகழ்வில் கோவை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அம்மன்.கே.அர்ஜுனன் அவர்கள் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை பொது மக்களுக்கு வழங்கினார் .இந்த நிகழ்வில் அதிமுக அம்மா பேரவை இணைச்செயலாளர், சிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர்.ஜெயராம், திரைப்பட நடிகர் இயக்குனர் அனுமோகன், அதிமுக தலைமைக் கழகப் பேச்சாளர் செங்கை. கோவிந்தராஜ், மாணவரணி செயலாளர் சிங்கை ஜி ராமச்சந்திரன், செய்தி தொடர்பாளர் பேராசிரியர் கல்யாண சுந்தரம், செய்தி தொடர்பாளர், மகளிர் அணி இணைச் செயலாளர் மகேஸ்வரி, கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் பலரும் கலந்துக்கொண்டனர்.



Global kids
No1 Preschool Specialist
CHAIN OF PRESCHOOLS
20 YEARS EXCELLENCY
All Subjects
All Boards
ISO 9001 CERTIFIED
REGULAR / WEEKEND & HOLIDAY CLASSES
Reading Classes : English | Tamil Hindi
Handwriting : English | Tamil Hindi
Spoken Hindi : 8 Levels
Spoken English : 3 Levels
Puppet Story Telling
Speed Writing & Reading
Phonetics English
Abacus & Brain Gym
Vedic Speed Maths
Yoga / Meditation
Karate
Tangling Art
Robotics / AI / IoT
Chess classes
Computer Courses
Drawing & Glass Painting
Tanjore glass painting
Rubik's Cube
Spell Bee
Hindi Sabha Exams
Vocal Singing / Shlokas
Subject Tuition / Test Batch : LKG to VIII
GLOBAL abacus THE BRAIN CHALLENGE
Global Handwriting
Mythi Fine Arts
Global VEDICMATHS FASTEST CALCULATION SYSTEM
SOWRIPALAYAM PIRIVU 98941 96795
OLYMBUS 98941 96795 / 95431 93292
SRIPATHY NAGAR 95431 93292 / 99441 12700

# விளம்பரம் பார்த்தால்தான் காகிதம் கிடைக்கும்! இதற்குமா?



தொழில்நுட்ப வளர்ச்சி நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது 3ஜி, 4ஜி, 5ஜி எனப் பல பரிமாற்றங்களில் சேவை முன் நோக்கி வளர்கிறது. பல நாடுகளில் 5ஜி தொழில்நுட்பம் நடைமுறையில் இருக்கும் வேளையில், சீனா தனது 10ஜி சேவையை சோதனை செய்துள்ளதாகக் கூறப்படுகிறது . மற்றவர்களை தாண்டி தொழில் நுட்பத்தில் வேகமாக முன்னேறுவரும் சீனாவில் கழிவறைகளிலும்புதியத் தொழில்நுட்பத்தைப் புகுத்தி உள்ளது .


பொதுக் கழிப்பறைகளில் காகிதைப் பயன்படுத்த கட்டுப்பாடு விதித்துள்ளது. அதில் தொழில்நுட்பத்தை புகுத்தி , அங்கே காகிதம் பயன்படுத்தவேண்டுமானால் கியூஆர் கோடு ஸ்கேன் செய்யவேண்டும் அப்பொழுது அதில் வரும் விளம்பரத்தை முழுவதும் பார்த்தால்தான் காகிதம் வெளியே வரும். நீங்கள் விளம்பரத்தை பார்க்க விரும்பாவிட்டால் கட்டணம் செலுத்தி காகிதம் பெற வேண்டுவது கட்டாயம் . இயற்கை உபாதை கழிக்கும் இடத்தில் இந்த விளம்பரம் உத்தி பலரை முகம் சுழிக்க வைத்துள்ளது. இருந்த போதிலும் காகித வீணாக்கப் படுவதை குறைக்கும் நோக்கில் இதன் யுக்தியைப் பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

TOLET
RAYTRACE PROPERTIES
இராமநாதபுரம் ஸ்ரீபதிநகர்
2 BHK HOUSE FOR LEASE
Rs.11 Lakhs Only
98941 96795
96775 94521

சாத்விகம்
Sloka Classes
Slokas - Bhajans - Thirukural
Ramayana, bhagavada Stories Vishnu Sahasra Namam
98941 85461

LAND FOR SALE
14 Cents with Building Ellaithottam Road, Peelamedu, Cbe
30 Cents with Building Jainagar, Peelamedu, Cbe
Ct: 94430 21183

Dr. Vibration Veera
"Change your Words will Change your World"
LIFE TRANSFORMATION STRATEGIST
Certified Corporate Trainer, NLP Practitioner, Orator, Motivational Speaker.
Self Confidence Building 6 Days
Listening Skill Training 6 Days
Business Communication 6 Days
Presentation Skill Training 15 Days
Mind Shift Training 15 Days
WHATSAPP TRAINING
(AS PER YOUR CONVENIENT TIME)
ENGLISH & தமிழில்
+91 88382 08603 www.vibrationveera.in
WHATSUP TRAINING PROGRAM
6 days & 15 days - Program
Each Program is well planned, the participant will receive materials & explanations will send as an audio files.
Participants need to follow the instructions given / listen to the audio files with involvement and can learn things as per their convenient time.
INVESTMENT FEES:
6 DAYS - RS. 499
15 DAYS - RS.999
Interested can Enroll & for More Details
Call - 8838208603. | www.vibrationveera.in
Dr.Vibratuon Veera
Life Transformation Strategist.




# மஞ்சள் காமாலையா அலட்சியம் வேண்டாம் !

மஞ்சள் காமாலை என்பது கல்லீரலின் செயல்பாடுகளில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக உடலில் மஞ்சள் நிறம் தோன்றும் ஒரு நோயாகும். இதனால் தோல், கண் வெண்மை, நகம் போன்றவை மஞ்சள் நிறமாக மாறுகின்றன.

சமீபத்தில் திரைத் துறையினரை மட்டும் இன்றி பலரையும் அதிர்ச்சிக்குள்ளாகிய செய்தி நடிகர் ரோபோ ஷங்கரின் மறைவு. இவரது இறப்புக்கு பலக் காரணங்கள் சொல்லப்பட்டாலும் மஞ்சகாமாலையும் ஒரு காரணமாக அமைந்திருபப்தாக தகவல் வெளியாகி இருக்கிறது . ஒரு உயிரைப் பறிக்கும் அளவுக்கு மஞ்சகாமாலை மிகப்பெரிய நோயா , அலட்சியமாக இருந்தால் மீள்வது கடினம் எனக் எச்சரிக்கிறார் இயற்கை நல மருத்துவர் சிவக்குமார் அவர்கள் .

மஞ்சள் காமாலை என்பது கல்லீரலின் செயல் பாடுகளில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக உடலில் மஞ்சள் நிறம் தோன்றும் ஒரு நோயாகும். இதனால் தோல், கண் வெண்மை, நகம் போன்றவை மஞ்சள் நிறமாக மாறுகின்றன. மஞ்சள்காமாலை வருவதற்கான காரணங்கள் பல இருந்தாலும் ஒரு




சில காரணங்கள் தான் மிக முக்கியமானதாக இருக்கின்றனர் உதாரணமாக வைரல் தொற்றுகள், கல்லீரல் நோய்கள் தாக்கம் , ரத்த அணுக்களின் உடல் சீர் குறைபாடுகள் ஆகியவை ஆகும்.

கல்லீரல் செயலிழப்பு அல்லது கல்லீரல் நோயால் மஞ்சக்காமாலை ஏற்படுகிறது, ஏனெனில் இரத்தத்தில் இருந்து பிலிரூபினை வடிகட்டுவது கல்லீரல் பொறுப்பாகும். ஒருவர் உண்ணும் உணவு மற்றும் குடிக்கும் தண்ணீரின் தரம் அளவு கல்லீரலின் செயல்பாட்டை நேரடியாக பாதிக்கிறது. அதுமட்டுமின்றி அசுத்தமான தண்ணிரில் இருக்கும் கொசுக்கள்மூலம் காமாலை நோய் பரவும். கல் ஈரல் சிதைவு ஏற்படும் பொது மண்ணீரல் இறப்பை குடல் பாதிப்படையும் இதற்கு முக்கியக் காரணம், நீண்ட நாள் மது , புகைப் போன்றவற்றை அதிகமாக உட்கொள்வதால் அதிக பாதிப்பு ஏற்படுகிறது. ஆரோக்கியமான உணவைப் பின்பற்றினால் கல்லீரல் திறமையாக செயல்பட முடியும்

எந்த மருத்துவ சிகிச்சையையும் தானாக மேற்கொள்ளாமல் மருத்துவரை அணுகி இயற்கை மருத்துவம் மற்றும் நவீன மருத்துவ சிகிச்சை கட்டாயம் மேற்கொள்ள வேண்டும் . நோயின் ஆரம்ப நிலையைக் கண்டறிந்து மருத்துவ சிகிச்சையை அலட்சியப்படுத்தாமல் எடுத்துக்கொண்டால் இந்தநோயிலிருந்து விலகி பூரண குணம் பெறலாம். இயற்கை கொடையான நிகரற்ற நற்குணம் வாய்ந்த மூலிகைகளை சாப்பிடுவதன் மூலம் சித்த மருத்துவம் உணவு மருத்துவமாக மாறுகிறது இதனையே திருவள்ளுவர் , உண்ட உண்ணவு நன்றாக சீரணித்தப் பின் உணவு உன்ன வேண்டும் என பின் வரும் திருக்குறள் மூலம் உணத்துகிறார்.

" மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின். "இந்த நோய் மட்டுமல்ல எந்த நோய்களுக்கும் அலட்சியம் காட்டினால் மீள்வது கடினம் எனக் எச்சரித்து முடிக்கிறார் இயற்கை நல மருத்துவர் சிவக்குமார்.

✍ மருத்துவர் ஆர்.சிவக்குமார்
வெள்ளலூர், கோவை
செல் : 9500811835



# லயன்ஸ் கிளப் ஆஃப் கோயம்புத்தூர் சுப்பீரியர் கிங்ஸ் முப்பெரும் விழா !

● கோவை

லயன்ஸ் கிளப் ஆஃப் கோயம்புத்தூர் சுப்பீரியர் கிங்ஸ்" மற்றும் "பீப்பிள் லீகல் ரைட்ஸ் அசோசியேஷன்" ஆகியவை இணைந்து, கோயம்புத்தூரில் முப்பெரும் கௌரவ விழாவை முன்னெடுத்து நடத்தியது.

இந்த விழாவில், சமூகத்திற்காகப் பணியாற்றிய 200–க்கு மேற்பட்டோருக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டது மேலும், 30 மாற்றுத் திறனாளிகள் மற்றும் கணவர் இல்லாதக் குடும்பங்களுக்கு மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டதுடன், பெற்றோர் இல்லாத ஆட்டிசம் குழந்தைகளுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட்டன. அத்துடன், அப்பா, அம்மா அல்லது கணவர் இல்லாத குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ரூ.2000 மதிப்பிலான மளிகைப் பொருட்கள் வழங்கி , அவர்களின் வாழ்வாதாரத்திற்கு பயனுள்ள உதவியினை செய்தனர்.



ஓவியம் : பிரின்ஸ் பிரவுசன். ரா
கோவை

# ஜி.எஸ்.டி. மூலம் கிடைக்கும் வருமானத்தை திரும்ப மக்களுக்கே மத்திய அரசு கொடுக்கிறது



## கோவை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வானதி ஸ்ரீனிவாசன் தகவல்

● கோவை

திருத்தப்பட்ட ஜி.எஸ்.டி எனும் சரக்கு மற்றும் சேவை வரி நாடு முழுவதும் அமலுக்கு வந்தது. பல அத்தியாவசியப் பொருட்களின் விலை மளமளவென குறையத்தொடங்கின .

இந்த நிலையில் கோவையில் நடந்த ஒரு நிகழ்ச்சியின் போது செய்தி யாளர்களைச் சந்தித்த கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாஜக தேசிய மகளிர் அணித் தலைவர் வானதி சீனிவாசன்," நாடு முழுவதும் மக்கள் பயன்படுத்தும் அதிக அளவிலான பொருட் களுக்கு வரி குறைந்துள்ளது என்றார்.

இதனால் பொருட்கள் வாங்குதல் மற்றும் விற்றல் அதிகரிக்கத் துவங்கும். இதனால் பொருளாதாரம் அதிக வளர்ச்சியைக் காண வாய்ப்புள்ளது. இதை உலக அளவில் உள்ள பெரும் நிதி நிறுவனங்கள்/ஆய்வுகளை நடத்தக்கூடிய நிறுவனங்கள், இந்தியாவின் பொருளா தாரம் என்பது இந்த ஜி.எஸ்.டி. வரி குறைப்பால் அதிக வளர்ச்சி காணும் என கணித்துள்ளனர் என்பதை பகிர்ந்துக் கொண்டுள்ளனர் என்றார். ஜி.எஸ்.டி வரிக்குறைப்பை அமல்படுத்துவதை மாநில அரசுகள் தான் செய்ய வேண்டும் என க் கூறிய அவர் இது குறித்து முதல்வர் ஸ்டாலின் எதுவும் பேசாமல் வேடிக்கை பார்க்கிறார் என குற்றம் சாட்டினார்.

ஜிஎஸ்டி மூலம் அரசுக்கு கிடைக்கும் வருமானத்தை திரும்ப மக்களுக்கே மத்திய அரசு கொடுப்பதாகவும், மக்கள் தரும் வரி, பல்வேறு திட்டங்களாக அவர்களுக்கே வழங்கப்படுவதாக கூறினார். ஜி.எஸ்.டி மூலம் அரசுக்கு வருவாய் அதிகரிக்க அதிகரிக்க, ஜி.எஸ். டிக்குள் வராத மற்ற பொருட்கள் சிறிது சிறிதாக கொண்டுவர வாய்ப்புள்ளதுஎனக் கூறிய அவர், மாநில அரசாங்கங்கள் ஒத்துழைப்பு தந்தால் மிக விரைவாக பெட்ரோலிய பொருட்களையும் ஜி.எஸ்.டிக்குள் கொண்டு வர முடியும் எனவும் கூறினார் .

இதனையடுத்து கோவை கணபதி பகுதியில் உள்ள கார் விற்பனையகத்திற்கு சென்று, விற்பனை மேலாளரிடம் ஜி.எஸ்.டி வரி குறைப்பு குறித்து உரை யாடினார் ஜி.எஸ்.டி குறைப்பால் கார்களின் விலையில் ரூ.50,000 முதல் ரூ.2,40,000 வரை சேமிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் வாகன விற்பனை அதிகரித்துள்ளதாகவும் மேலாளர் தெரிவித்துள்ளார் . மேலும் ஜி.எஸ்.டி விலை குறைப்பை பற்றி பொதுமக்களுக்கு தெளிவாக விளம்பர பலகைகள் வைக்கவும் கோரிக்கை வைத்தார்.



# கணபதி போலீஸ் காலனி வீட்டு உரிமையாளர்கள் நல சங்கத் தேர்தல்!

கோவை கணபதி போலீஸ் காலனி வீட்டு உரிமையாளர்கள் நல சங்கத்தின் தேர்தல் சமீபத்தில் நடை பெற்றது , இந்த தேர்தலில் தலைவராக எஸ். ராஜேந்திரன், துணைத் தலைவராக பைஜி பழனிசாமி, செயலாளராக இஞ்ஜினியர் கே.சி.வில்லியம், துணைச் செயலாளராக பி.என். மனோஜ்குமார், பொருளா ளராக ஸ்ரீதரன் ஆகியோர் வெற்றி பெற்று தேர்தெடுக்கப்பட்டனர்.

# ராசிபலன்

**1.10.2025 முதல் 7.10.2025 வரை**



ஜோதிடர்
**பண்டிட் உத்ரகுமார்**
வெள்ளலூர்,கோவை
செல்:81909 57191

**மேஷம்** : உங்களுக்கு தைரியம் அதிகரிக்கும் வாரம் . நீங்கள் எடுக்கும் முக்கிய முடிவுகள் உங்களுக்கு மிகவும் சாதகமாக அமையும் வாரம். ஆயினும் நீங்கள் உங்கள் முன் கோபத்தை கட்டுப்படுத்த வேண்டும். இளைய சகோதரர் சகோதரிகள் மூலம் ஆதாயம் காணும் வாரம் வாழ்த்துக்கள்.

**ரிஷபம்** : உங்களுக்கு பொருளாதார வரவுகள் அதிகரிக்கும் வாரம்.குடும்ப உறவுகளில் இருந்து வந்த சச்சரவுகள் தீரும்.மூத்த அண்ணன்.அக்கா ஆகியோரிடம் விட்டுக்கொடுத்து செல்வதன் மூலம் மேலும் சந்தோஷம் அதிகரிக்கும் வாரம்.

**மிதுனம்** : உங்கள் புத்திசாதூர்யம் வெளிப்படும் வாரம். அதன்மூலம் பொருளாதார முன்னேற்றம் அடையும். இதுவரை இருந்த சொத்துப் பிரச்சனை அதன் மூலம் வம்பு வழக்குகள் அனைத்தும் முடிவு காண வேண்டிய வாரம். இதற்கு தாயாரின் ஒத்துழைப்பு உங்களுக்கு மேலும் உற்சாகம் தரும்.

**கடகம்** : சுபச்செலவுகள் செய்யவேண்டிய வாரம் அதற்குண்டான பொருளாதார வசதிகள் உங்களுக்கு கிடைக்கும்.வெளியூர், வெளிநாட்டு தொடர்புகள் மூலம் ஆதாயம் கிடைக்கும். இதுவரை வேலை கிடைக்கா தவர்களுக்கு நல்ல வேலை அமையும் வாரம்.

**சிம்மம்**: உங்களுக்கு லாபம் கிடைத்தாலும் அது பற்றாக்குறையாக உள்ளதாக உணரும் வாரம். ஆயினும் சமாளிக்கும் வாரமே! மூத்த அண்ணன். அக்கா ஆகியோரிடம் அனுசரித்து செல்வதின் மூலம் ஆதாயம் காணலாம்.

**கன்னி** : உங்களுக்கு தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும் வாரம். பொருளாதார வரவுகள் நினைத்த படி அமையும், ஆயினும் தாயாரின் உடல் நலனில் அக்கறை செலுத்தவேண்டிய வாரம்.

**துலாம்**: பொருளாதார முன்னேற்றம் இருந்தாலும் வீண் அலைச்சல் தரும் வாரம் கவனம் தேவை . ஆயினும் உடல் நலனில் இருந்து வந்த சங்கடங்கள் விலகி உற்சாகம் பொங்கும் .

**விருச்சிகம்** : படிப்பு மற்றும் சொல்லிக்கொடுக்கும் துறைகளில் இருப்போர் கவனமாக இருக்க வேண் டிய வாரம் . தவறான புரிதலால் சில சங்கடங்கள் வரலாம் கவனம் ஆயினும் சமாளிக்கும் வாரமே. இந்த வாரம் உங்கள் உடல் நலனில் அக்கறை தேவை. நலனில் அக்கறை செலுத்தவேண்டிய வாரம்.

**தனுசு** : உங்களுக்கு வாழ்க்கை துணை மூலம் வசதிகள் வந்து சேரும் வாரம் . கணவன். மனைவி உறவு மிகவும் சிறப்பாக இருக்கும். அதன் மூலம் வெற்றி,புகழ் அடையும் வாரம் இது.

**மகரம்** : உங்களுக்கு இதுவரை தந்தை,மற்றும் தந்தையாரின் உறவுகளிடம் இருந்துவந்த கருத்து வேற்றுமை தீரும் வாரம். அதேபோல் தாயாரின் கருத்துக்கும் மதிப்பளிக்கும் வாரம். வேலையில் இதுவரை இருந்து வந்த கஷ்டங்கள் முடிவுக்கு வரும்.

**கும்பம்** : மனைவி வழி உறவுகள் மூலம் உதவிகள் கிடைக்கும். குழந்தை பேறு இல்லாத தம்பதி களுக்கு அதற்குண்டான நல்ல வைத்திய முறை அறிமுகம் ஆகும் வாரம் . கணவன் மனைவி ஒற்றுமை மேலோங்கும் .

**மீனம்** : உங்களுக்கு இதுவரை இருக்கும் பொருளா தார முன்னேற்றத்தை தக்க வைக்கும் வாரம் ஆயினும் சிரமம் இருக்கத்தான் செய்யும். வெளிநாடு, வெளிமாநிலத் தொடர்புகள் உங்களுக்கு மிகவும் சாதகமான பலன்களைக் கொடுக்கும் வாரம் இது.





# மேக்ஸ்வெல் அறக்கட்டளையின் நான்காம் ஆண்டு துவக்க விழா

## நட்சத்திரங்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகளுடன் பிரம்மாண்டமாக நடந்தது

● கோவை

கோவை காந்திபுரத்தை தலைமை இடமாகக் கொண்டு செயல்படும் மேக்ஸ்வெல் அறக்கட்டளை 4–ம் ஆண்டில் அடியெடுத்து வைத்ததை முன்னிட்டு கோவைப்புதூர் வி எல் பி ஜானகி அம்மாள் கலை அறிவியல் கல்லூரியில் உள்ள வெளிவிளையாட்டு அரங்கில் 3500 பேருடன் மிகச் சிறப்பாக விழாவை கொண்டாடியது.

விழாவில் தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக செயல்பட்டு வரும் 100க்கும் மேற்பட்ட சமூக அறக்கட்டளைக்கு சிறந்த சேவை அமைப்பிற்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும் அதில் மிகச் சிறப்பாக செயல்பட்ட ஒரு அறக்கட்டளைக்கு ரூபாய் ஒரு லட்சம் நன்கொடையும், அடுத்த 5 அறக்கட்டளைகளுக்கு தலா 10,000 நன்கொடையும் வழங்கப்பட்டது. இப்போட்டியில் முதல் பரிசாக ரூபாய் ஒரு லட்சம் நன்கொடையை கோவை ஜீவ சாந்தி அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது.

இந்த அறக்கட்டளை இதுவரை கிட்டத்தட்ட 13,000 அனாதை சடலங்களை அடக்கம் செய்து அதற்கான சடங்குகளும் செய்துள்ளது. அடுத்தடுத்த ரூ10,000 காசோலைகளை பெற்றுக் கொண்ட அறக்கட்டளைகள் விபரம் பின்வருமாறு : ஸ்வதர்மா பவுண்டேஷன் ஸ்ரீ சக்தி சுற்றுச்சூழல் அமைப்பு அன்புவனம் அறக்கட்டளை, துளிர் கல்வி அறக்கட்டளை, அருணாலயம் அறக்கட்டளை.

அறக்கட்டளை வரலாற்றில் பிற அறக்கட்டளைகளின் வளர்ச்சியை மனதில் கொண்டு அவர்களை அரவணைத்து விருதுகள் வழங்கியதோடு நன்கொடையும் வழங்கி சிறப்பித்ததில் மேக்ஸ்வெல் அறக்கட்டளை முதலிடம் வகிக்கிறது. மேலும் கிட்டத்தட்ட 200 பயனாளி களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் கிட்டதட்ட 6.5 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டது.

குறிப்பாக 20 மாற்றுத்திறனாளிகளுக்கு வீல் சேர் வழங்கப்பட்டது. கணவனால் கைவிடப்பட்ட 16 பெண்மணிகளுக்கு தொழில் துவங்க தையல் மிஷின், வெயிட் மிஷின், இட்லி கடைக்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டது. மலைவாழ் மாணவர்கள் 5 பேர் உட்பட தாய் தந்தை இருவரையும் இழந்து பள்ளி கல்லூரி பயிலும் மாணவ மாணவிகள் 15 பேருக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

மேலும் 70 மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்களும் வழங்கப்பட்டது மிகவும் எளிமையான 75 குடும்பங்களுக்கு சேலை அரிசி மளிகை பொருட்கள் போன்ற பல்வேறு உபகரணங்கள் வழங்கப்பட்டது.

மேலும் சன் ஸ்மார்ட் சரவணன், அருணாலயம் அருணா, திரைத்துறையினர் மற்றும் இதர நல விரும்பிகளின் பங்களிப்பு எப்போதும் மேக்ஸ்வெல் அறக்கட்டளையின் முன்னேற்றத்திற்கு கரம் கொடுத்துக் கொண்டிருப்பதாக தெரிவித்தார். மேலும் கொத்தளங்கோ ஆட்டிசம் இல்ல குழந்தைகள் உட்பட பல்வேறு நடன நிகழ்ச்சிகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது

சிறப்பு விருந்தினர்களாக சன் ஸ்மார்ட் குடும்ப தலைவர் சரவணன், அருணாலயம் அறக்கட்டளை நிறுவனர் அருணா, முத்துக்குமார், விஎல்பி கல்லூரி பிருந்தா, கலைவாணி, யுனைடெட் கல்லூரி விஜயா, ஏஜிஸ் நிறுவன தலைவர்கள் சிவா மற்றும் கீர்த்தி, ஆஸ்கார் பிராப்பர்ட்டீஸ் முருகேசன், சன் ஸ்மார்ட் சாகுல், உமா, ST அசோசியேட்ஸ் பாலமுருகன், திருமதி சாலை காயத்ரி, ஸ்கை குளோபல் பவுண்டேஷன் சதீஷ் தங்கப்பன், புவனாம்பாள் சுப்ரமணியம், மணிகண்டன் பந்தல் நிலையம் சூர்யா, திருமதி புனிதா, ஓம் முருகா ஈவண்ட்ஸ் திரு மகேஷ், நிஷாந்த், ஹோப் ஈவண்ட்ஸ் சார்லஸ், யுனிக் டிஜிட்டல் பிரசன்னா, ஜெஸிலா அஞ்சலின், முத்துமாரி, கீதா, பர்கத் நிஷா இவர்களோடு தின இதிகை பத்திரிக்கை குழுமமும், மேக்ஸ்வெல் குடும்ப அணி நண்பர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் பல்வேறு திரைத் துறையினர் விழாவில் கலந்து கொண்டு மேக்ஸ்வெல் அறக்கட்டளையை வாழ்த்தியதோடு பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தி மக்களை உற்சாகப் படுத்தினர்.

நட்சத்திர விருந்தினராக நடிகைகள் பிரணிகா, ஷாலினி, பவித்ரா லட்சுமி, RJ ஆனந்தி, சூப்பர் சிங்கர் ரிகானா, ஆதனா ஸ்ரீ, விஜய்டிவி அருண் அரவிந்த், VJ விக்கி, Emcee ஓவியா, DJ வாட்சன், Mentalist Nubson ஆகியோர் கலந்து கொண்டு விழாவை பிரம்மாண்டப்படுத்தினர்.

முன்னதாக 80 லட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து மாபெரும் சாதனை செய்த மேக்ஸ்வெல் அறக்கட்டளை தற்போது அறக்கட்டளை வரலாற்றில் இவ்வளவு பெரிய துவக்க விழாவை நடத்தி பல்வேறு நலத்திட்ட உதவிகள் செய்ததில் முன்னோடியாக திகழ்கிறது.

### அனைத்து சமூகப் பணிகளுக்கும் அணி நண்பர்களே உறுதுணை

**மேக்ஸ்வெல் அறக்கட்டளை நிறுவனர் முனைவர் மா.முருகன் பேச்சு**



**மேக்ஸ்வெல் அறக்கட்டளை நிறுவனர் முனைவர் மா முருகன் விழாவில் பேசும்போது இதுவரை அறக்கட்டளை செய்த அத்தனை நலத்திட்ட உதவிகள் உட்பட தற்போது நடைபெற்ற இந்த பிரம்மாண்ட நலத்திட்ட உதவி விழா வரை அனைத்து சமூகப் பணிகளுக்கும் அணி நண்பர்களே உறுதுணை ஆக இருந்ததாக தெரிவித்தார்.**




























# 90 சதவீத பணிகள் நிறைவடைந்த கோவை மேற்கு புறவழி சாலை முதல் பகுதி!



● கோவை

கோவை மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்க மேற்கு புறவழி சாலை திட்டம் ஆகஸ்ட் 2023ல் துவங்கியது. மொத்தம் 32.4 கி.மீ. நீளம் கொண்ட இந்த புறவழிச்சாலை 3 பகுதிகளாக அமைக்கப்படுகிறது.

மதுக்கரை முதல் மாதம்பட்டி வரை முதல் பகுதி (11.80 கி.மீ), மாதம்பட்டி முதல் கணுவாய் முதல் இரண்டாம் பகுதி (12.10 கி.மீ), கணுவாய் முதல் நரசிம்மநாயக்கன்பாளையம் வரை மூன்றாம் பகுதி (8.52 கி.மீ) ஆக பிரிக்கப்பட்டு உள்ளது. முதல் பகுதி ரூ.250 கோடி மதிப்பில் நடைபெற்றுவருகிறது. மொத்தம் 11.80 கி.மீ நீளத்திற்கு சாலை அமைக்க வேண்டிய இடத்தில் இன்னும் 2 கிலோ மீட்டருக்கு மட்டும் வேலை பாக்கி உள்ளது. மேலும் இப்பகுதியில் அமைகிற மாதம்பட்டி சந்திப்பு மேம்பால பணிகள் நிறைவேறியுள்ளது. அதே சமயம் மைல்கல் பகுதியில் அமைகிற மேம் பாலம் 40% நிறைவேறி உள்ளது.

கட்டுமான பொருட்கள் விலை உயர்வு, மேம்பாலம் அமையும் மைல்கல் பகுதியில் நிலம் கையகப் படுத்துதலில் தாமதம், நிலத்தடியில் உள்ள குழாய்கள், வயர்களை வேறு இடத்திற்கு மாற்றுதல் மற்றும் சில எதிர்பாரா சவால்களால் இந்த முதல் பகுதி தாமதம் ஆக காரணங்களாக பார்க்கப்படுகிறது. முதல் கட்ட பணிகள் மொத்தம் 90% நிறைவடைந்துள்ளது.

செப்டம்பர் 2025ல் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட இந்த முதல் பகுதியின் பிரதான சாலையை நவம்பரில் முடித்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரவும், மேம்பாலம் உள்ளிட்ட முதல் கட்ட பணிகள் 2025 டிசம்பருக்குள் முழுமையாக முடிக்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். முதல் கட்ட பணிகள் நிறைவேறிய பின்னர் தான் மாதம் பட்டி முதல் கணுவாய் வரைக்கான இரண்டாம் கட்ட பணிகள் துவங்கும். மேலும் இந்த திட்டத்திற்கு தேவையான நிலம் 90%க்கும் மேல் கையகப் படுத்தப்பட்டுவிட்டது.



# முதலுதவி சிகிச்சை நூலை இலவசமாக வழங்கிய இரகுராமன்



● கோவை

சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் நூற்றாண்டு விழாவையொட்டி கல்லூரியின் "நாட்டுநலப்பணித்திட்டம்" மற்றும் கோவை அறம் அறக்கட்டளை ஆகியவை சார்பில் "கோல்டன் ஹவர்" – அவசரகால முதலுதவி சிகிச்சை கையேட்டின் 35 ஆயிரமாவது நூல் வழங்கும் விழா கோவை தமிழ்க்கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் முன்னாள் ஆளுநர். மருத்துவர் தமிழிசை பேசும்போது இந்த புத்தகத்தில் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய உள்ளன, குறிப்பாக "கோல்டன் ஹவர் என்பது மிக மிக முக்கியம் முதல் 60 நிமிடத்தில் நாம் தரக்கூடிய முதலுதவி மூலம் மட்டுமே ஒரு உயிர் காப்பாற்றப் படுகிறது. ஆம்புலன்ஸ் வரும் முன் செய்ய வேண்டிய "முதலுதவி சிகிச்சை" முறைகள், செய்யக்கூடாத முறைகள் குறித்து மிக அற்புதமாக இப்புத்தகத்தில் வரைபடத்துடன் விளக்கப்பட்டுள்ளது.

"உயிர்காக்கும் இந்த நூலை பாரதப் பிரதமர் மாண்புமிகு மோடி அவர்களின் பார்வைக்கு எடுத்துச்சென்று தேசிய பாடத்திட்டத்தில் சேர்க்க முயற்சி மேற் கொள்வேன். நூலாசிரியர் இரகுராமன் அவர்கள் அவசரகால முதலுதவி சிகிச்சை நூலை இலவசமாக தருவது டன் மட்டுமல்லாமல் அதற்கான "சிறப்பு பயிற்சிகளும்" சிறந்த வல்லுநர்களை கொண்டு மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது என்கிற செய்தியை கேட்டு மகிழ்ச்சி அடைந்தேன். 2026 ல் நாங்களே ஆட்சிக்கு வந்து இந்த அவசர கால முதலுதவி சிகிச்சை நூலை தமிழக பாடத்திட்டத்தில் சேர்த்து விடுவதாகவும்" தமிழிசை கூறினார்.

## தமிழிசை சௌந்தரராஜன் பாராட்டு!

மேலும் கோவை அறம் அறக் கட்டளை நிறுவனத்தலைவர் ப. இரகு ராமனின் நற்சேவையை பாராட்டி "நினைவுப்பரிசு" வழங்கினார். இந்த நிகழ்வில் பேரூர் ஆதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளார், என். ஜி. பி. கல்வி அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர். டாக்டர். தவமணிதேவி பழனிசாமி, கொங்குநாடு கலை, அறிவியல் கல்லூரி செயலர். டாக்டர். வாசுகி, பா.ஜ.க. மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகர், பட்டிமன்ற பேச்சாளர் சாந்தாமணி, கோவை அறம் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் ப.இரகுராமன், நிர்வாகிகள் ராஜா, கவிதா ரகுராமன், ஆர்.கே. ஸ்ரீவர்ஷா மற்றும் கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசு, நாட்டு நலப்பணித்திட்ட ஆசிரியர் ஆதிநாராயணசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் 1000 மாணவர்களுக்கு இலவசமாக நூல் வழங்கப்பட்டது. இதன் வெளியீட்டை மிகப்புதுமையான முறையில் "ரோபோ" இயந்திரம் முதல் புத்தகத்தை மருத்துவர் தமிழிசையிடம் வழங்கியது பார்வையாளர்கள் மத்தியில் பரவசத்தை ஏற்படுத்தியது.



# ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் தேவாவுக்கு கிடைத்த கௌரவம்!

இளம் தலைமுறையினரை 1990 களில் தன் இசையால் கட்டிப் போட்ட இசையமைப்பாளர்களில் மிகவும் முக்கியமானவர் தேனிசை தென்றல் தேவா. இவரது இசை தேனிசையாக நம் செவிக்கு இன்றும் உணவாகவும் மனதுக்கு இன்பமாக வும் இருந்து வருவதை யாராலும் மறுக்க முடியாத ஒன்று.

கானா, மெலடி, குத்துப் பாட்டு எனப் பலவிதமான பாடல்களை ரசிகர்களுக்கு வழங்கியவர் இசை மேதை தேவா. பல ஆயிரம் பாடல்களை கொடுத்த தேவா அவர்களுக்கு சமீபத்தில் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில், அளிக்கப்பட்ட வரவேற்பு, உலகத் இசை பெரியார்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

## நாடாளுமன்ற சபாநாயகரின் இருக்கையில் அமரவைத்து கௌரவம்

சமீபத்தில் தேவா ஆஸ்திரேலியா சென்றிருந்தபோது, ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் அவருக்கு, அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் கள் மிகவும் உயர்ந்த மரியாதையுடன் வரவேற்றுள்ளனர். நாடாளுமன்ற சபாநாயகரின் இருக்கையில் அவரை அமரவைத்து, தமிழ் கலாச்சாரத்தின் பாரம்பரிய சின்னமான செங்கோல் கொடுத்துக்கௌரவித்துள்ளனர். தேவா அவர்கள் சபாநாயகர் இருக்கை யில் அமர்ந்திருக்கும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன. தமிழ்த் திரைத் துறையைச் சேர்ந்த இயக்குநர்கள், இசையமைப்பாளர்கள், நடிகர்கள் எனப் பலரும் அவருக்கு வாழ்த்து களை தெரிவித்துவருகின்றனர்.

1989–ல் சந்தனக்காற்று என்ற படத்தின்மூலம் இசையமைப் பாளராக அறிமுகமானார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆர்விஎஸ் கலை அறிவியல் கல்லூரியில் மனிதவள கருத்தரங்கம் 2025

● கோவை

ஆர்விஎஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தனது பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு பிரிவின் மூலம் “மனிதவளக் கருத்தரங்கம் - 2025” என்ற தலைப்பில் மாணவர் களுக்கு தேவையான நிகழ்வை கடந்த 27–ம் தேதி வெற்றிகரமாக நடத்தியது.

இந்த நிகழ்வில் “வேலைவாய்ப்பின் எதிர்காலமும் தகுதித் திறன்களும் மின்னணு தொழில்துறை வாழ்க்கை மற்றும் வளர்ச்சி என்ற தலைப்புகளில் நடைபெற்றது. எல் அண்ட் டீ ,விப்ரோ, காக்னிசண்ட், ஹச்சி எல் டெக் உள்ளிட்ட முன்னணி நிறுவனங் களின் ஹச்ஆர் வல்லுநர்கள் பங்கேற்று தொழில்துறை பார்வைகளையும் அனுபவங் களையும் பகிர்ந்தனர்.

இந்த நிகழ்வின் மூலம் மாணவர்கள் தொழில்துறை எதிர்பார்ப்புகள், வேலை வாய்ப்பு திறன்கள், வாழ்க்கைக் குறிப்பு (பயோ டேட்டா ) தயாரிப்பு முறைகள் மற்றும் தன்னம்பிக்கை வளர்ச்சிக்கான வழிகாட்டுதல்கள் பற்றிய பயனுள்ள தகவலை மாணவர்களுக்கு பகிர்தனர், எதிர்கால வேலைவாய்ப்பு செயல்முறைகளை தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் வலிமையையும் மாணவர்களுக்கு பகிரப் பட்டது. மற்றும் எதிர்கால வேலைவாய்ப்பு சவால்கள் குறித்து முக்கிய வழிகாட்டுதல் களை வழங்கினர்.

வேலைவாய்ப்பு இயக்குநர் டாக்டர் பி. மஞ்சு வரவேற்புரையையும், முதல்வர் டாக்டர் டி. சிவகுமார் தலைமை உரை யையும் வழங்கினர்.

துறை இயக்குநர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் வேலைவாய்ப்பு ஒருங்கிணைப் பாளர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். சூர்யகுமார் மற்றும் சரண் கிருஷ்ணன் ஆகியோர் சிறப்பாக நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்தினர்.





# க்வாட்ரா சிஸ்டம்ஸ் 25-ம் ஆண்டு விழாவுக்காக 1000 மரக்கன்றுகள் நடும் நிகழ்வு

● கோவை

சிறுதுளி, க்வாட்ரா சிஸ்டம்ஸ் மற்றும் தெற்கு ரெயில்வே இணைந்து, துடியலூரில் ரெயில்வே நிலத்தில் 1,000 மரக்கன்றுகளை நட்டனர். க்வாட்ரா சிஸ்டம்ஸ் தனது 25–ம் ஆண்டு நிறைவை குறிக்கும் வகையில் இந்த நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது. கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரும், க்வாட்ரா சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் தன்னார்வலர்களும் கலந்து கொண்டனர்.




# டென் டென் செஸ் அகாடமியின் 9வது மாநில சதுரங்கப் போட்டி

● சென்னை

டென் டென் செஸ் அகாடமி ஏற்பாட்டில் நடைபெற்ற 9வது தமிழக மாநில அளவிலான சதுரங்கப் போட்டி கடந்த ஆகஸ்ட் 31–ம் தேதி சென்னை யில் உள்ள கேட்வே இன்டர்நேஷனல் பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது.

இப்போட்டியில் தமிழகத்தின் 13 மாவட்டங் களைச்சேர்ந்த 438 வீரர்கள் பங்கேற்றனர். மொத்தம் 200 கோப்பைகளும் , 50 பதக்கங்களும் மற்றும் ஓபன் பிரிவில் ரூ.25,000 தொகையுடன் 25 ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. இளைய வீரர்களுக்கான சிறப்பு விருதும், சிறந்த அகாடமிகளுக்கான பாராட்டு களும் வழங்கப்பட்டன. அண்டர் 7 பிரிவில் மைத்திக் (கடலூர்) மிலானி ஜோசப் (சென்னை) ஆகியோரும் அண்டர் 9 பிரிவில் கவுதம் ஹரிஷ் (திருவள்ளூர்) ஆராதனா (சென்னை) ஆகியோரும். அண்டர் 11 பிரிவில் ஹரிஹரன் செல்வா (செங்கல்பட்டு) ரித்வியா தீபக் (செங்கல்பட்டு) ஆகியோரும் அண்டர் 13 பிரிவில் விஷ்வா (செங்கல்பட்டு), ரூஹானி (செங்கல்பட்டு) ஆகியோரும் அண்டர் 17 பிரிவில் சுகதீபன் (செங்கல்பட்டு) கீர்த்தி வர்ஷா (சென்னை) ஆகியோரும் ஓபன் பிரிவில் ஆகாஷ் (செங்கல்பட்டு) அவர்களும் வெற்றிப்பெற்றனர்.

கேட்வே பள்ளித் துணை முதல்வர் திருமதி நந்தினி, டென் டென் செஸ் அகாடமி தலைவர் எஸ்.ஆர்.ஜானகிராமன், செயலாளர் எஸ்.என்.ஏ. அமர்நாத் மற்றும் தலைமை நடுவர் ஐ.ஏ.எஸ். கனிமொழி கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினர். இளம் சதுரங்க வீரர்களை ஊக்குவிக்கும் விதமாக நடந்த இப்போட்டி மாநில அளவில் சதுரங்க வளர்ச்சிக்கு புதிய உந்துதலை அளித்தது.



தின இதிகை
எங்களை தொடர்பு கொள்ளுங்கள்
அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தனியார் அமைப்புகள், பள்ளி, கல்லூரிகள் தங்களது செய்திகள்/ நிகழ்ச்சிகள் அல்லது கட்டுரைகளை நமது இதழில் பதிய விரும்பினால்
9345 97 57 47
என்ற வாட்ஸ் அப் எண்ணுக்கு அல்லது dinaidhigainews@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

பொறுப்பல்ல : இந்த செய்தித்தாளில் பிரசுரம் ஆகி உள்ள விளம்பரங்கள்/ விளம்பரதாரர்/ அவர்களின் தயாரிப்புகள்/ சேவைகள் அடிப்படையில் செயல்படும்முன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக் கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர்/ அவர்களின் தயாரிப்புகள்/ சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்த செய்தித்தாளின் உரிமையாளரும், பதிப்பாளர்களுக்கும் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின் மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர் பதிப்பாளர் அச்சிடுவோர் ஆசிரியர் இயக்குனர்கள் ஊழியர்கள் ஆகியோர் எந்த சூழலிலும் எந்த வகையிலும் அதற்கு பொறுப்பாக மாட்டார்கள். படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்து வைத்துக்கொண்டு அனுப்பவும் பிரசுரம் ஆகாதவற்றை திரும்ப அனுப்ப இயலாது.

Published by C Sathish Kumar on behalf of C Sathish Kumar, Printed by EXPRESS PRESS, at Coimbatore and published at NO.3, 3rd Street Thiruvalluvar Nagar Ramanathapuram, Coimbatore-641045. Editor : C Sathish Kumar.